KALANILAYAM   தனிப்பிரதி விலை 0-2-6 அணா.

கலா நிலயம்

V 8. No. 17. 25.4.1935

௧

M211, N28KN
N35.8:17
199215

KALANILAYAM தனிப்பிரதி விலை 0-2-6 அணு.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ஞ ஏப்ரல் மீ 25 உ [No. 17

-9 NOV 1935
MADRAS

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	257
2.	கம்பராமாயணம் (கிட்கிந்தைப் படலம்) T. N. சேஷாசலம் B.A., B. L.,	259
3.	ஒத்தெல்லோ (அங்கம் 2. களம் 1.) Shakespeare's "Othello"	261
4.	நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 6-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L.	263
5.	கம்பர் சிருட்டியிற் பிறந்த கற்பினுள் K. நாராயண ரெட்டிகாரு	265
6.	சூரியன் (சூரியகும்பம் - செவ்வாய்) E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A.,L.T.,	266
7.	நரவாகன தத்த சரிதம் S. சோமசுந்திர தேசிகர்	268
8.	காலத் தொனி T. R. இராஜ கோபால்	270
9.	வர்த்தமானம்	272

கலாநிலயம்

சமயச் சேர்க்கை 2.

தனிமையுந் தானுமா யமைந்த புனிதமான வேளைகளிற்றான் ஒருவன் தன்னுடைய முழுமையை அனுபவிக்கக்கூடியவனாக இருக்கின்றான். அப்பொழுதவன், சென்றதுகருதித் துயர்கூர்வதும் நாளை வருவதற்குஅஞ்சி விதிர்விதிர்ப்பதுமாகவேதீர்ந்துவிடுவானாயின், பிறகு அவன் தான் ஒருமதத்தினன் என்று உரைத்துக்கொள்வதற்கு வாயற்றவனாகின்றான். நம்முடைய நெஞ்சம் அல்லது நமக்கு ஒரு வஞ்சமற்ற துணை யில்லையென்பது உண்மையே; ஆயினும், அந்நெஞ்சிற்கு நாம் எவ்வளவு வஞ்சனைகள் செய்கின்றோமென்பது நாம் நம்முடனே தனிமையாக இருக்கும்பொழுதுதான் தெரியவரும். பிரபஞ்ச அனுபவங்களை யெல்லாம் தன்னுள் அடக்கியிருக்கின்ற நமது நெஞ்சம் நமக்குச் சொல்லவருவதைக் கேட்காமல் அதன் வாயை அடைப்பதிலேயே கருத்துடையவர்களாய், கேட்பவர்போல் பொய்யே தலையைமாத்திரம் அசைத்துவிட்டு, நாமோ நம்முடைய சிறு மானிடச் சூழ்ச்சிகளை அதற்குள்ளே புகுத்தப் பார்க்கின்றோம். "உள்ளே இருக்கின்ற உன்கடவுளைக்காட்டுகின்றேன் வருக" என்று அழைக்கின்றது நம் நெஞ்சு. நாமோ அதனுடன் செல்பவர்போல் நடித்து, வீண் சமயவாதங்களுக்குப் பொய்சாக்ஷி சொல்லும்படி அந்நெஞ்சிற்குப் போதிக்கத் தலைப்படுகின்றோம். 'சமயம்' உன்பால் ஒழுங்கு' சேர்ந்திருக்கிறதென்று கூறுகின்றது நம் நெஞ்சு. நாமோ, நாம் ஒரு சமயத்தைச் சேர்ந்திருப்பதாக விளம்பி அச் சமயத்தைப் பாதுகாக்கவேண்டியவர்களாக விவகரிக்கின்றோம். மதப்பற்றுடையவராக விவகரிக்கின்றவர்களிற் பெரும்பாலோர் (நாத்திகனும் ஒரு மதத்தைச் சேர்ந்தவனே என்பதை மறத்தலாகாது) தம்முடைய மதத்தை ஒரு நோயாளியேயாக்கக் கருதுகிற பரிபவம், அவர்நடமாட்டங்களைத் தொடர்ந்து ஆராயுங்கால் தென்படும். தற்காலக் கொடுமைகளால் மதம் அழியாதபடி அதற்கு வைத்தியங்கள்சில செய்யவே தலைபடுகின்றனர். புத்தகங்களிலும் பிரசங்கமேடைகளிலும், மதத்தைப் பிடித்துப் பீடிக்கின்ற நோயின் தன்மைஆராயப்படுகின்றது. கற்றவர்கள் இதனிற்குத்தக்க "சிகிச்சை" இதுதான் என்பர்; ஒன்றுமே கல்லாதாரும் 'சிகிச்சைகள்' சொல்வதற்கு அஞ்சுவதில்லை. ஏனைய பல நோய்களுக்கு மருந்து வியாபாரம் பலத்திருப்பதுபோலவே, இம் மதநோய் மருந்துவர்த்தகமும் பெருகிவருகின்றது. எனினும், இதனால், தங்கள் தனிமையின் சாந்தியை ஒருவரும் அடைந்தவர்களாகக் காணப்படவில்லையே. இவையனைத்தும்கூட்டங்கூடுங் கடைத்தெருவின்கூக்குரலுக்குதவுகின்றனவேயன்றித் தனிமையின் அமைதிக்குப் பயன்படவில்லையே. இந்தச் செய்தியை, ஒரு ஆங்கிலச் சிந்தனையாளர், ல். பி. ஜாக்ஸ் (L. P. Jacks, D. D., L. L. D., D. Litt.) என்பவர் மிகவும் நுட்பமாக ஆராய்ந்து உண்மையுறப் பின்வருமாறு வரைந்திருக்கின்றார். அதனைக் கருத்துட்கொள்ளல் நலம்:—

"It may be doubted whether any man, since the world began, has ever been made religious by the study of religion. It may even be doubted, though this is more questionable, whether the great men of old whom we now recognize as the outstanding religious figures of history know how religious they were. They certainly said very little about religion, though they had much to say about life and death and the great powers which preside over tham both. It would seem that religion always came to these men, not when they were studying religion, but when they were studying somethlng else; never came as the thing they were directly aiming at, but always as the result, sometimes an unexpected result, of their getting deeply immersed in other things; deeply immersed in the work of their hands as hunters, shepherds, mariners, tillers of the soil, or as artists and craftsmen; deeply immersed in the joys or sorrows of their neighbours; deeply immersed in the duties and responsibilities of their ciizenship; deeply immersed in the struggle for existence, the battle of life and the bitterness of death, this last especially. Some of them sank into an utter loneliness, and became immersed in **themselves**, in profound meditation on that mysterious entity which affirms its existence by saying "I am"; and others forgetting self altogether, become immersed in the universe about them, in the vastness of it, the majesty of it. Out of these deep immersions there came religion, came spontaneously without beeing sought or worried about, came, as it were, by indirection. Such seems to have been the way in which religion was born in the great men of old, not by vigorously taking it on hand, but by taking some thing else vigourously on hand. One might describe religion as a by-product of the persuit of excellence, but obviously one of great value or at least so esteemed by those who found it."

ஆதலின், சமயக் கல்வியும் பிரசாரங்களும் வாதங்களும், இவைகள் அனைய பிறவெல்லாம் சேர்க்கைச் சமயச் செய்திகளே ஆருமன்றிச் சமயச் சேர்க்கையினது செவ்விய நிலைக்கு ஆதாரமாகமாட்டா. ல். பி ஜாக்ஸ் சொல்லியிருக்கின்றபடி, சமயமானது ஒருவனைத் தானாக வந்தடைந்து உடனுறைகின்ற தொன்றும். ஒருவன் வேறு வேறு வேளைகளில் காரியங்கள் வேறுவேறு பல ஆயிரம் செய்துகொண்டிருக்கலாம்; அது ஒரு பொருளில்லை. தனியாயிருக்கும் வேளையில் தனது முழுமையின் தோற்றம் தன் மனக்கண்ணின் முன் தென்படுகின்றதோ, என்பதே கேள்வி. ஏனைய வேளைகளில் அவன் செய்துவருகின்ற காரியங்களின் சாரத்தை அவனது தனிமையிற் காணல்வேண்டும்.

தனிமையிற்றான் மனிதனது முழுமையும் சிதையாமல் நின்று சிறக்கின்றதாதலின், பிரபஞ்ச உணர்வில் மூழ்கினவனாகின்றான். அப்பொழுதே அவன் கடவுளைப்பற்றியும் சமயத்தைப்பற்றியும் பேசமாட்டாத நிலையில் இருத்தலினால் அவனுடைய உணர்வு பிரபஞ்சத்தோடு திரள்கின்றது. கடவுள் நம்மிடத்தில் இல்லாதபோதுதான் அதிகமும் அக்கடவுளைப் பற்றிப் பேசுவோம். கடவுள் உடன் இருக்கின்ற அந்நிலையோ மௌன நிலை. இயேசுகிறிஸ்துநாதர் தாயுமானவர் புத்தர் அனையவர் கடவுளைப் பற்றிப் பேசியிருப்பன மிகமிகச் சிறியவை. மிகமிகக் கலங்கிக் கையற்ற நிலைகளில், "என் கடவுளே, கடவுளே, என்னை என் நீ கைவிட்டுவிட்டாய்" என்று இயேசுநாதரைப் போலவும், "சத்தமற நின்ற மோன நிலை தந்தருள்வாய்" என்று தாயுமானவரைப் போலவும், கடவுளை அழைப்பார்களே யல்லாமல் கடவுளைப் பற்றிப் பல பேசத் தலைப்படமாட்டார். ஏனெனில், பேசிப் பேசியொரு கடவுளைத் தேடுகின்றவர் அல்லர் இன்னவர்; தேடாமலே கடவுள் இவர்களைச் சேர்ந்திருக்கின்றார். எல்லாம் தேடித்தானு அடைதல் வேண்டும்! வழியை மாத்திரம் அடைக்காமல் திறந்து வைப்போமானல் தானே வந்துசேராதோ அந்தத் தனிப்பரம்பொருள்! ஆங்கில கவி, வோர்ட்ஸ்வோர்த் என்பவர்,

Think'st thou 'midst all this mighty sum
of things for ever speaking,
That nothing of itself will come
But thou must still be seeking

[ஓயாமல் தம் வதந்தியை உரைத்துவண்ணமாக இருக்கிற பொருள்களின் இம்மாபெருந்தொகுதியினிடையே, நீ எஞ்ஞான்றும் தேடியபடியே இருப்பதல்லது, தானாகவே ஒன்றும் வாராதென்று எண்ணுகின்றாயோ நீ.]

என்னக் கேட்கும் இது, 'வாரேதே வரவல்ல' வொரு கடவுளின் அருமையையே காட்டுகின்றது. தனிமையின் தூய்மையில் அமர்ந்துள்ள ஒருவன், பிரபஞ்சம் அவனுக்கு உரைக்கின்ற வதந்தியைக் கேட்பானல்லது தானொன்றும் எதிர்பேசமாட்டான். "ஆம், அறிகின்றேன்," "ஆம், ஒவ்வுகின்றேன்," என்பான்போல் சிற்சில அபிநயங்களால் அவ் வதந்திக்குத் தன்னுடைய சம்மதத்தைத் தெரிவிப்பதன்றி, இவன் விளம்பவேண்டியனவும் யாதுமில்லை. ஏனையோர்க்கு இவன் செய்யவேண்டிய உபதேசமெல்லாம், பிரபஞ்சவதந்திக்குச் செவிகொடுக்கும்படி அவர்களைத் தூண்டுவதன்றி வேறொன்றுமிவனாற் பேசப்பட்டதுமாகாது. இவன் செய்யும் ஜபங்களும் மிகச் சுருக்கமாகவே இருக்கும். "கேட்டேன், அப்படியே உடன்பட்டேன்" என்னும் வாய்பாட்டினுள் இவனது துதிபாடல்களெல்லாம் அடங்கிவிடும். கேள்வியின் வாயிலாக அல்லது வேறுவழியில் கடவுளை அறிந்துகொண்டவர் இன்னவர்களே. இவர்தாம் கடவுள் உண்டு என்பதற்குக் காரணம் வேண்டாதவர்.

உண்மை யமைதியை உற்று நோக்குங்கால், தான் இருப்பதற்கு ஒரு காரணம் காட்டவேண்டியது அவசிய மென்ற நிலையில் நிற்பாராயின், என்ன கடவுள் அக்கடவுள்! மற்று, காரணம் வேண்டுகின்ற பக்தன் தான் என்னபக்தன்! கடவுளைக் காரணத்தால் கட்டிவைத்துக்கொள்ள வேண்டுபவன் வெறுங் கோழைகளின் இனத்திற் சேர்க்க[illegible]யே

m211,N28K.N
N35.8.17
199215

கடவுளை நம்பற்குரிய வீரமற்றவனினும் நாத்திகனே மேல். கடவுள் இல்லாதவிடம் ஒன்று காட்டவேண்டுமானல், அவர் இருக்கின்றார் என்பதற்கு ஆதாரமாக உரைக்கப்படுகின்ற காரணமேயன்றிக் காட்டுவதற்கு வேறே இடம் இல்லை. காரணங்களைத் தாங்கவல்ல ஆன்மவீரம் இல்லாவிடத்து அக்கடவுள் வீண். காரணங்களைக் கைப்பற்றிக் கடவுளை விட்டுவிடுவோம். காரணமின்றியேயும் வீரமேகொண்டு நம்புகின்றவர்களுக்குத்தான் கடவுட்செல்வம் வாய்த்திடும். மற்றைய விடங்களிற் போலவே கடவுட் திறத்திலும் வீரமே எந்நாளும் நம்முடைய காப்பாகும்.

சேர்க்கைச் சமயத்தில் மயங்காமல் சமயச்சேர்க்கையில் தெளியவல்ல அமயம் நம்மொடு நாம் ஒரு தனியே இருக்கும்போதுதான் வாய்க்கும். தூய்மை வாய்ந்த அவ்வேளையை ஆன்மசாதனமாக்கிவைக்கும் பண்பினைப் பயிற்றுவிக்கவில்லன கலைகளேயாதலின், உளங்கனிந்து அதன்பால் வரும்படி இக்'கலாநிலயம்' அனைவரையும் அழைக்கின்றது.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தா காண்டம்—10. கிட்கிந்தைப் படலம்

[249-வது பக்கத் தொடர்ச்சி]

வீரன் பிழையே தாரையின் பாக்கியம்.

வலக் கார்முகந் தன் கையதாக இலக்குவன் வந்தனனென்பதை யறிந்துள வானரத்தலைவன் சுக்கிரீவன், தாரையைத்தழுவியிருந்த தன் கைகளை அரிதின் நெகிழ்த்து "பெண்ணே, நீயே சென்று வந்துளோன் கோபத்தைத் தணி" என்று வேண்டிநின்ற ஒரு இழிவையோ, கடைவாயிற்கள்ளொழுகத் தன்கணவனுக்கொரு கூற்றுவனைக் கொணர்ந்து கொல்வித்த தம்பியின் காமச்சேக்கையின் கோலங் கலையாமலே வந்து நின்றாள் ஒருத்தியைக் கண்டால் 'அந்தச் சுத்த ஆத்ம கோபங் கொள்ளமாட்டார்' என மதித்த துணிவையோ, இலக்குவனும் இப் புன்தொழிற் குரங்கு தன்னைப்பற்றிக் கொண்டிருந்த அம்மதிப்பைப் பொய்யாக்காமல், அன்னவளைக் கண்டவளவில், 'கோபத்தைத் துறந்து தலைகுனிந்து ஒதுங்கி நின்ற' நீர்மையையோ, எதனைக்கருதித்திகைப்பதென்பது தெரிந்ததில்லை. அதுவும், வாலியார் உயிரினைக் காலனுர் கையிற் கொண்டு சேர்த்தவரை நோக்கி, "நீங்கள் எங்களுக்குச் செய்த நன்றியையும் அறிவேன்; நாங்கள் அதற்கு என்ன கைம்மாறு செய்யவேண்டும் என்பதையும் அறிவேன்" என்று தாரை வாயினல் உரைத்தபோது இலக்குவனது இரண்டு செவிகளும் கூசவில்லையாயின் அவன் சிந்தனை முற்றிலும் வேறு ஒன்றினில் ஊன்றியிருக்கவேண்டும். எனின், அவனது கவனத்தைச் சூழ்வாள்போலக் "காமவேட்கையுற்றவன் காலதேசங்களையாவது அறம்பொருள்களையாவது அறியான்; என்னருகில் இருக்கின்றமையினல், காமமுற்று அதனல் நாணிழந்திருக்கின்ற உமது பிராதாவாகிய அரிக்குலத்தலைவனைப்பொறுத்தருளும்; தர்மத்திலும் தவத்திலும் பற்றுவைத்த முனிவர்களும் காமவின்பத்தை விரும்பி மோகம் அடைவார்களாயின் இயல்பாகவே திண்மையில்லாத ஒரு குரக்கினத்தவனாகிய சுக்கிரீவன் காமவின்பத்தில் அழுந்தாதிருப்பது எங்ஙனம்" என இவள் விளம்பிய இதனிழிவிற்கு எல்லை காணலரிது. இச்சொற்களைப் பொருண்மொழிக்காஞ்சி யென்பர் வான்மீகி முனிவர். ஆயினும், ஊக்கமுள்ளத்துடைய முனிவராலும் காக்கமாட்டாதது காமன்கை வில் என்னும் இக்கருத்து ஒரு மந்தியின் புன்மையே யன்றி இம்முனிவரது கொள்கையோ அன்றென்ன நினைக்கின்ற நயத்தினை நாம் அவருக்குப் புரிதல் வேண்டும். எனினும் ஒன்று; "மக்களுட் சிறந்தாய், நீர் இவ்வாறு கோபமடைந்திருக்கின்றமையினல் நுமது புத்தி காமதந்திரத்திற் செல்லவில்லை" யென்று தாரை இலக்குவனை நோக்கி மொழிந்த வாசகத்துள், எவ்வகை இரகசியம் அடங்கியிருக்கின்றதோ வென்று நாம் அயிர்த்தாலும் அத்தனையுந் தரும். தனது கைம்மையை விற்று அதனைத் தந்த கொழுந்தனை அரிதின் வாங்கி அவனேடு உண்டாடிக் கிடப்பதன்றி, அந்நன்றியையும் இன்பத்தையும் நாணந்துறந்துதவில்கின்ற இக்குரக்குமகள் இலக்குவனைத் தன் காமதந்திரத்தினுட் படுத்த வெண்ணி அது வாய்க்காமையின், காமஞ் சாலா இளமையோன்வயின் ஏமஞ்சாலா முதுமையோள் முறையில் உளந்தளர்ந்து குறைகூறுகின்றாள் போலும். இவள் செயலும் சொல்லும் இப்பெற்றியதாக, முன் அவ்வாலி மாய்ந்தநாள் அருகு நின்று, "இனி நான் நாதனின்றிக் கைம்மை துக்கம் தாழ்வு இவைகளை எங்ஙனம் சகிப்பேன்" என்று தன்னிலையே நினைந்திரங்கிப்புலம்பிய தெல்லாம் பொய்யாய்ப் போயின.

இன்ன தன்மையளாகிய ஒரு தாயைக் கண்டு எங்ஙனம் அவ் விளமைந்தன் அங்கதன் தரித்தானே, பாவம்! தன் கணவன் இறந்த மூன்றேமாதங்களுக்குள், அவனைக்கொன்ற தம்பியுடன் கூடித் தன் கணவனெனவே கொண்டாடுகின்ற இத் தாரையின் புதல்வன் எல்லாவகையிலும், ஷேக்ஸ்ப்பியர் சித்தரித்த டென்மார்க் தேயத்து இளவரசன் அந்த ஹாம்லட்டையே ஒக்கின்றான். ஹாம்லட்டோ அதற்காற்றமல் பித்தனுய்ப் பிதிர்ந்துதீர, வான்மீகமுனிவரது மொழியுள் வந்த அங்கதன் இவ்விழிவினை யறிந்திலனே, மற்று, கசியுந் தன்கண்களை வாலினல் துடைத்துத்துடைத்துத் தன்னருந்துயரைக் காட்டாமல் மறைத்தனனே, தேர் தலருமை. அங்கு, "அன்னையே, அன்னையே, அந்தச் சித்திரத்தையும் பார், இந்தச் சித்திரத்தையும் பார்" என்று ஹாம்லட், மாய்ந்த தன் தந்தையையும், தனதன்னை மணங்கொண்ட அவன் தம்பியையும் சீர்தூக்கிக்காட்டி யிடித்துரைத்ததுபோல், இவ்வங்கதனும் தாரையை யிடித்துரைத்திருக்கவேண்டுமாயினும் அன்னது துணியுந்தர மிவனுக் கில்லாமற்போயிற்று. வாலியின் பிழைதான் எவ்வளவேயாயினும், அவன் மனைவியைச் சுக்கிரீவன் வயப்படுத்திக்கொண்டவிது, ஒத்தெல்லோ தன் மனைவி எமிலியாவோடு பொல்லா உறவுபூண்டுளனே என்று சங்கையடைந்தவன்போல் பாவித்த அக்கொடியோன் இயாகோ, டெஸ்டிமோனவை வஞ்சித்து, "மனைவிக்கு மனைவி" தன் பழி

யைத் தீர்த்துக்கொள்ளத் துணிந்ததனினும் அதிகம் வேறாகத் தோன்றவில்லையே. இத்துணையும் போதாதென்று, இலக்குவன் உட்புகுங்கால், "பொன்னிறமுடைய சுக்கிரீவன் சிறந்த ஆசனத்திலிருந்து, தன் மனைவியாகிய உருமையை இறுகத் தழுவிக்கொண்டு வீரமுள்ள இலக்ஷ்மணர் வருவதைக் கண்டனன்" என்னுமிச் செய்தியைச் சிந்திக்குங்கால் சிரிப்பு மிக விளைகின்றது. தாரை அருகு இல்லாதபோது ருமையும் சிறிது சுக்கிரீவனால் தழுவப்படுவாள் போலும். வருகின்றவீரனை வரவேற்கும் வகையிது மிக நன்று! இதன்மேல் வால்மீகர் வரலாற்றைத் தொடர்வோம்.

"மக்களுள் ஏறுபோன்ற லக்ஷ்மணர் கோபங்கொண்டு, ஒருவராலும் தடுக்கப்படாமல், அந்தப்புரத்தினுள் வந்ததைச் சுக்கிரீவன்கண்டு மனங்கலங்கினான். கோபமடைந்து நெட்டுயிர்த்து, தன் தேககாந்தியால் எரிகின்ற நெருப்புப்போல் விளங்கி, தமது தமையனார்க்கு நேர்ந்த துக்கத்தால் வாடியிருக்கின்ற தசரதகுமாரரை அவ் வரியின்வேந்தன் கண்டு பொன்மயமான ஆசனத்தைவிட்டு அலங்கரிக்கப்பட்ட பெரிய இந்திரத் துவசம்போலத் திடீரென்று எழுந்திருந்தான். ஆகாயத்தில்பூரணசந்திரன்உதயமானபோது தாராகணங்களெல்லாம் தோன்றினாற்போல, சுக்கிரீவன் எழுந்திருக்கவே அவனைத் தொடர்ந்து உருமை முதலிய பெண்களெல்லாம் எழுந்திருந்தார்கள். சிவந்த கண்களையுடையசுக்கிரீவன்கைகூப்பிக்கொண்டுஒருபெரிய கற்பக விருக்ஷம்போல அவ்விடத்தில் நின்றான். விண்மீன்களின் நடுவே விளங்குகின்ற சந்திரனைப்போல உருமாசமேதனாய் நாரியர்நடுவில் நின்ற சுக்கிரீவனை லக்ஷ்மணர் மிக்க கோபமோடு நோக்கி, "நல்லகுலத்திற்பிறந்தவனும், அருளுடையவனும், புலன்களை வென்றவனும், நன்றியறிந்தவனும், உண்மை பேசுபவனுமாகிய அரசனை உலகம் மேலாகக் கூறும். அதர்மம்புரிந்துகொண்டு தனக்கு நன்றிசெய்த நண்பர்களுக்குப் பொய்ப்பிரதிஞ்ஞை செய்கின்ற அரசனிலும் கொடியன் யாவனுளன்? கவியின் வேந்தே, "ஒரு குதிரையின்பொருட்டுப் பொய்பேசுபவன் நூறுகுதிரைகளைக் கொன்ற பாபத்திற்காளாவான்; ஒரு பசுவின்பொருட்டுப் பொய்பேசுபவன் ஆயிரம்பசுவைக் கொன்ற பாபத்திற்கு ஆளாவான்; ஒரு மனிதன்பொருட்டுப் பொய் பேசுபவன் தன்னையும்தன்னுடையமித்திரரையுங்கொன்றவனாவான். முன்பொருநன்மை செய்யப்பெற்று அதற்குப்பின்பொரு கைம்மாறுசெய்யாத செய்ந்நன்றி கொன்றவன் உலகத்தினில்எல்லாராலும் கொல்லப்படத்தக்கவன்" என்று பிரமதேவர் ஒரு நன்றிகொன்றவனைக்கண்டு கோபங்கொண்டு பாடினார். இதை நீ யறிந்துகொள். பிரமக்கொலை செய்தவனுக்கும், கள்ளுண்டவனுக்கும், திருடனுக்கும், விரதந் தவறினவனுக்கும் அறநூல்செய்தவர்கள் உய்திகூறியிருக்கின்றார்கள்; நன்றிகொன்றவனுக்கோ உய்தி கூறவில்லை. முன்னர் இராமரால் உதவிசெய்யப்பெற்று அதன் பின்னர் அவருக்குக் கைம்மாறு செய்யாத நீ அநாரியனும் நன்றிகொன்றவனும் பொய்பேசுபவனும் ஆகின்றனை. இராமரால் உதவிசெய்யப்பெற்ற நீ, அவருக்குக் கைமாறுசெய்ய இச்சைகொண்டு, சீதையைத் தேடுவதில் முயற்சி செய்ய வேண்டாமோ? நீ பொய்ப்பிரதிஞ்ஞைசெய்துவிட்டுப்பின் இச்சிற்றின்பத்தில்ஆழ்ந்திருக்கின்றனை. தவளையின்குரலையுடைய சர்ப்பமென்றுன்னை இராமர் அறியாதுபோய்விட்டார். துராத்துமாவும் பாபியுமாகிய நீ பெருந்தோள்களும் கருணையுமுடைய மகாத்துமாவாகிய இராமரால் வானர இராச்சியத்தை அடைந்தனை. இராமர் உனக்குச் செய்த உதவியை நீ எண்ணுகின்றாயில்லை; ஆகையினால் நீ கூரிய பாணங்காற் கொல்லப்பட்டு வாலியை விரைவில் போய்க் காண்பாய். சுக்கிரீவ, வாலி சென்ற வழி இன்னும் மூடப்படவில்லை; ஆதலால் நீ செய்த வாக்குத்தத்தத்தில் தவறாதே; வாலிசென்றவழியில் நீயும் செல்லாதே. இக்ஷ்வாகு குலோத்தமருடைய கார்முகத்தினின்று விடப்படும் வச்சிராயுதம்போன்ற பாணத்தைப் பாராட்டிக்கொண்டு இராமருடைய காரியத்தை மனத்தினாலும் நினைக்காதிருக்கின்றனை" என்று கூறினார்.

தேககாந்தியினால் எரிகின்ற அக்கினிபோல் விளங்கிய லக்ஷ்மணர் இவ்வாறு கூறவே, சந்திரன்போன்றமுகத்தையுடைய தாரை அவரைநோக்கி, "லக்ஷ்மண, நீர் இவ்வாறு கூறுதலாகாது; வானரவேந்தன் இந்தக் கடுஞ்சொல்லைக் கேட்கத்தகாது; அதுவும் உமது வாயிலிருந்து கேட்கலாகாது. வீர, கவியின் வேந்தனாகிய சுக்கிரீவன் நன்றிகொன்றவனுமல்லன்; கள்வனுமல்லன்; கொடியவனுமல்லன்; பொய்யனுமல்லன்; வஞ்சகனுமல்லன். வீரனாகிய சுக்கிரீவன் போரிலே மற்றொருவராலும் செய்யப்படாத உதவியை இராமர் செய்ததை மறந்துவிட்டவனுமல்லன். இராமருடைய அருளினாலன்றோ அவன் நிலையான கீர்த்தியையும் வானர ராச்சியத்தையும் உருமையையும் என்னையும் பெற்றிருக்கின்றான்? அவன் முன்பு துன்பத்தில் அழுந்திக்கிடந்து இப்போது இந்தப்பெருஞ் சுகத்தை அடைந்ததனால் விசுவாமித்திர முனிவரைப்போலத் தனது முயற்சிக் கேற்றகாலம் வந்துவிட்டதை அறியாதிருக்கின்றான். லக்ஷ்மண, அந்தவிசுவாமித்திரமகமுனிவர் முன்பு கிருதாச்சியினிடத்தில் மோகங்கொண்டு அவளோடு கழித்த பத்து வருஷங்களை ஒருபகலாக எண்ணித் தம்முயற்சிக்குத்தக்க காலம் வந்ததையும் அறியாதிருந்தனர் அன்றோ? பெருந்தவத்தினராகிய விசுவாமித்திரர் செய்தி இப்படியாயின் மற்றுள்ள பாமரஜனங்களின் செய்தியைச் சொல்லவேண்டுவதென்! தேகசுபாவத்தின்படி நடந்து மெலிந்து திருப்தியடையாத சுக்கிரீவன் காமவின்பத்தில் வைத்த ஆசையை நீவிர் பொறுத்தருளுதல் வேண்டும். பொருள் நிச்சயம் பண்ணாத புல்லறிவாளர்போல நீவிர் கோபவசத்தராதல் தக்கதன்று. மக்களுள் ஏறுபோல்வாய், உம்மைப்போல நற்குணமுடையவர்கள் ஒன்றைத் தீர விசாரித்தறியாது உடனே கோபத்திற்கு வசப்பட மாட்டார்கள். அறத்தை உணர்ந்தாய், சுக்கிரீவன் பொருட்டு நான் உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்: பெருங் கோபத்தால் உண்டாகும் பெருந்துன்பத்தை விட்டுவிடும். இராமருடையபிரீதிக்காகச் சுக்கிரீவன் உருமையையும் என்னையும் வானர இராச்சியத்தையும், தன் தனதானிய செல்வங்களையும்விட்டுவிடுவான் என்பதுநான் அறிந்துளேன். சுக்கிரீவன் இராவணனைப் போரினில் கொன்று, உரோகிணியோடு சந்திரனைச் சேர்த்துவைத்தாற்போல, சீதையோடு இராமரைச் சேர்த்துவைப்பான். இலங்கையிலுள்ள இராக்ஷசர்கள் நூறாயிரங்கோடி, பதினாயிரம், முப்பத்தாறாயிரம், நூறு என்னுமப்பெருந்தொகையினர். அவ்வெல்லுதற்கரிய, வேண்டிய உருவமெடுக்கவல்ல ராக்ஷசர்களையும் மைதிலியைக் களவெடுத்துச்சென்றஇராவணனையும் துணையின்றிக் கொல்லமுடியாது. சுக்கிரீவன் துணையின்றி ஒருவனாக இருந்துகொண்டு யுத்தத்தில் அந்த ராக்ஷசர்களையும் கொடிய இராவணனையும்கொல்லமாட்டான். இன்னவாறு அவற்றை நன்கறிந்த கவியின் வேந்தராகிய வாலி எனக்குச் சொல்லினார். இவ்வளவுசேனை இராவணனுக்கு எவ்வாறு வந்ததென்பது எனக்குத் தெரியாது; நான் வாலியினிடத்தில் கேட்டபடி சொல்லினேன். உங்களுக்குத் துணைசெய்யும் பொருட்டு யுத்தத்திற் கென்று அநேக வானரவீரர்களை அழைக்கும்படி வானரத்தலைவர்கள் போயிருக்கின்றார்கள். அந்த வலிய வீரர்களின் வரவை எதிர்பார்ப்பதனால் சுக்கிரீவன் இராமருடைய காரியத்தை முடிப்பதற்குப் புறப்படாதிருக்கிறான். லக்ஷ்மண, சுக்கிரீவன் செய்திருக்கின்ற ஏற்பாட்டின்படியே அந்த மகா பலமுள்ள வானர சேனைகளெல்லாம் இன்றைக்கிங்கு வந்துசேர்ந்துவிடும்.

காகுத்த, இன்றைக்கு ஆயிரங்கோடி கரடிகளும் நூறு கோடி முசுக்களும், அநேக கோடி வானரர்களும், உம்மைவந்து அடைவார்கள். ஆதலால் நீர்உமதுகோபத்தை அடக்கும். உமது சினந்த இம்முகத்தையும் கோபத்தால் இரத்தம்போல் சிவந்திருக்கின்ற கண்ணையும் பார்த்துச் சிறந்த வானர வனிதைகள் மனக்கலக்கமடைந்திருக்கின்றார்கள்; அவர்கள்எல்லாரும் முன்னையிற் பயம்பிடித்தவர்களா யிருக்கின்றார்கள்" என்று கூறினாள்.

"இராமனுடைய அருளினால் இந்தச் சுக்கிரீவன், தன் நிலையான கீர்த்தியையும் வானரஇராச்சியத்தையும் உருமையையும்என்னையும் பெற்றிருக்கின்றான்" என்று தாரைதான் எவ்வளவு மகிழ்ந்தாலும், இதற்குக் காரணம் இராமனது அருளோ அல்லது அவன் செய்தவொரு பெரும்பிழையோ என்ற அவ்வையம் நீங்குத லரிது. இது நேர்மையாயின், சுக்கிரீவன் தாரையையும் உருமையையும் பெறும்படி அருள்புரிந்த இவ்விராமன், அவ்விருவரையும் பெற்றிருந்த வாலியின்பால் எப்பிழை கண்டு தண்டிக்கப் புகுந்தனன்! தாரையும் சுக்கிரீவனை விழைந்தாளென்பதை அமைதியாகக் காட்டுவதெனின், இவள் ஓரகத்தியாம் அந்த உருமை வாலியின்பால் எவ்விழைவு வைத்தனளென்பதை ஆராய்ந்த பின்னன்றோ இராமன் அக்காரியத்திற்குத் துணிந்திருக்க வேண்டும்! இராமன் ஆராயாமற் செய்த பிழையே தாரைபுரிந்த பா[illegible]றுப் போலும்!

ஒத்தெல்லோ

["Shakespeare's —"Othello"]

அங்கம் 2. களம் 1.

[250-வது பக்கத் தொடர்ச்சி]

இயாகோ:- சிறிது பொழுதில் துறைமுகத்திற்கு வந்து என்னைச் சந்திப்பாய். இங்குவா; நீ வீரனாயின்[1] —அற்பர்களும் தமக்குச் சுபாவமாயிருப்பதனினும் அதிகமான பெருமையினைத் தங்கள் குணத்தினுள், காதலுற்றிருக்குங்கால் கொள்கின்றனர்என்பர்[2]— நான் சொல்வதைக் கேள்; காவல் முற்றத்தில் இவ்விரவு காஸ்ஸியோ காவல் புரிகின்றான்— முதலில், இதனை நான் சொல்லவேண்டும் உனக்கு— நேராக டெஸ்டிமோனா அவன்பால் காதல்கொண்டிருக்கின்றாள்[3].

ராடரிகோ:—அவனிடத்திலா! என்னவிது, ஒரு போதும் இயலாது.

இயா:— உன் விரலை இப்படி வைத்துக்கொண்டு, உனது ஆன்மா போதனை பெறும்படி விடு.[4] இடம்பம் பேசி நம்பத்தகாத வீண் பொய்களைத் தனக்குச் சொல்லியதற்காகவே முதலில் அவள் அம்மூரனை எவ்வளவு உக்கிரமாய்க் காதலித்தாளென்பதைக் கருத்துட் கொள்; இன்னமும் இவள் அவனை இப்பிதற்றலுக்காகக் காதலித்திருப்பாளோ? உன் பகுத்தறிவுள்ள இதயம் அன்னது எண்ண வேண்டா[5]. அவள் கண்களுக்கும் உணவு வேண்டும்; பேயைப் பார்த்திருக்க அவள் எத்தகை மகிழ்ச்சி அடையக்கூடும்?[6] இரத்தம் மங்கலுற்றபோது, அதனை மீண்டும் கனற்றவும், தெவிட்டலுக்குப் புதிய பசியை ஊட்டவும்— வடிவினது வனப்புடன், வயது ஒழுக்கம் அழகுகளின் சம அனுபவமும் இருத்தல் வேண்டும்; இவைகளிலெல்லாம் ஊனமுடையவன் இம்மூரன்[7]. ஆதலின், அவசியமான இவ்வசதிகள் இன்மையால், மிருதுவான அவள்மென்மை தான் மோ

ஒத்தெல்லோவும் டெஸ்டிமோனாவும் ஏனையவர்களுடன் அகன்றபின், இயாகோவும் ராடரிகோவும் பேசிக்கொள்கின்றனர்.

(1) தான் சொல்வதைக் கவனமாகக் கேட்கும்படி இயாகோ, ராடரிகோவை அருகில் அழைக்கின்றான்.

(2) நீ வீரனாயின் நான் சொல்வதைக் கேள்—என்று வாக்கியம் சேர்ந்து முடியும்.

அற்பர்களும்......என்பர் = இது இடைப் பிறவரல். அற்பர்களுங் கூடக் காதல்கொண்டிருக்கும்போது வீரமுடையவர்களாகிவிடலாம், என்று சிலர் கூறக் கேட்டிருக்கின்றேன்; ஆதலால், நீ இயற்கையில் ஒருகோழையேயாயினும் உன் காதல் கைகூடுவதற்காகச் சில தீரமான செய்கைகளைச் செய்யத் துணிவாய் என்று எதிர்பார்க்கின்றேன்—என்பது பொருள்.

(3) காவல் முற்றம் = கோட்டையைக் காக்கின்றவர் காத்துநிற்கின்ற இடம். இவ்விரவு அங்கிருந்து காக்கின்றது காஸ்ஸியோவின் பொறுப்பு, என்று துவக்கிய இயகோ, அதுபற்றி ராடரிகோ என்ன செய்யவேண்டுமென்பதைத் தொடர்ந்து கூறாமல், காஸ்ஸியோவை டெஸ்டிமோனா காதலித்திருக்கின்றாளென்று வேறொன்று பேசப் புகுகின்றான்.

(4) 'உன் விரலை இப்படி வைத்துக் கொண்டு' என்று சொல்லி இவன், ராடரிகோவின் விரலைப்பிடித்து அவன் வாயைப் பொத்தியிருத்தல்வேண்டும். "நான் சொல்வதற்குக் குறுக்காக ஒன்றுஞ் சொல்லாமல், கவனமாகக் கேட்டு விஷயத்தை நன்கு தெரிந்துகொள்"— என்பது பொருள்.

(5) இடம்பமுடைய ஒத்தெல்லோ தான் சாதித்து விட்டதாக இயம்பிய வீண் பொய்களைக் கேட்டு அதுபற்றியே அவனிடம் உக்கிரமான காதல்கொண்ட டெஸ்டிமோனா, இன்னமும் அவ்விதப் பிதற்றல்களை விரும்பி அவனிடம் காதல் வைத்திருப்பாளென்று சிறிதேனும் நம்பாதே—என்பது பொருள்.

(6) ஒத்தெல்லோ பேசிய பெருமிதங்கள் அவள் காது களுக்கு இனிமையா யிருந்திருக்கலாம்; அது போதாது தன் கணவன் கண்ணிற்கு இனியனா யிருக்கவும் வேண்டு வாள். ஆயின், பேயனைய தோற்றமுடைய இம்மூரனைப் பார்த்துப்பார்த்து இவள் எங்ஙனந்தான் மகிழ்ந்திருக்கக் கூடும்— என்பது பொருள்.

(7) இரத்தம் மங்குதல் = காமத்தின் ஆர்வம் தணிதல். கனற்றல் = தூண்டுதல். தெவிட்டலுக்குப் புதிய பசியை ஊட்டல் = அனுபவித்துச் சலித்தவர்க்கு மீண்டும் ஆசை உண்டாக்கல். காமத்திற்குக் கண்ணில்லை யாகையால் காமத்தின் வேகம் இருக்கும்வரையில் யாரையும் யாரும் விழைந்து வாழலாம். ஆனால், காமத்தின் கருக்கு மழுங்கியதும், பின்னும் ஆசை தொடரவேண்டுமாயின், புருடனும் மனைவியும் வயது ஒழுக்கம் அழகு முதலியவைகளில் ஒத்தவர்களாக இருக்கவேண்டியது மிக அவசியம். ஒத்தெல்லோவிற்கு இவைகள் ஒன்றுமில்லை — என்பது பொருள்.

199215
M241,N24KW

சம் போயிற்றென்பது கண்டு, குமட்டத் தலைப்பட்டு, மூரனை அருவருத்து வெறுத்துவிடும்[8]. இயற்கையே அவளுக்கு இதனிற் போதனைசெய்து, இரண்டாந் தேர்தலுக்கு அவளை வற்புறுத்துமே[9]. இப்பொழுது ஐயா, இது மிக்க கர்ப்பமுள்ளதும் வலியாமற் பெறுவதுமாகிய சித்தாந்த மாகையால், இதனை ஒத்துக்கொண்டபின், காஸ்ஸியோவைப்போல், இவ் வதிர்ஷ்டத்தின் படிகளில் அவ்வளவு உன்னதமாய் யார் நிற்கின்றார்?[10] ஒளிந்து அவிழ்ந்த ஆசையையும் தன் சுவையையும் நன்கு சூழ்வதன்பொருட்டு, வினயமுடன் மனிதத்தன்மையினது தோற்றத்தின் உருவத்தைப் போர்த்துக்கொள்வதைக்காட்டிலும்அதிகமான மனச்சாக்ஷியில்லாத வாய்ச்சாலமிகவுடைய வொரு வஞ்சகக் கீழ்மகன்[11]? ஏன், யாரும்இல்லை; ஏன், யாருமில்லை[12]. வழுக்குகின்ற சூழ்ச்சியுடைய வஞ்சகன்[13]; தக்க தருணங்களைக் கண்டுபிடித்துக்கொள்பவன்; உண்மையான அனுகூலமானது தானேவந்து ஒருபோதுந் தோன்றா விட்டாலும், அனுகூலங்களைச் சிருஷ்டிக்கவும் மெய்யே கற்பிக்கவும் ஒரு கண்ணுடையவன்[14]. கீழ்மகப் பேயன்! அன்றியும், அக் கீழ்மகன், அழகு வாய்ந்தன் இளைஞன் பேதைமையும் பச்சைமனங்களும் வேண்டி நாடுவதற்குரியவைகளெல்லாம் தன்னிலே உடையவன்[15]; முழுக்கயவ துஷ்டன்: இந்தப் பெண்பாலும் அவனை முன்னரே கண்டுகொண்டுவிட்டாள்.[16].

ராட:-இவள் திறத்தில் நானிதனை நம்ப இயலாது; மிகச் சிறந்த பாக்கியமுடைய பதவிபெற்று நிறைந்திருக்கின்றனள் [17].

இயா:— பாக்கியமடைந்த அத்தியின் நுனி [18]! அவள் குடிக்கும் ஒயின் திராக்ஷைப்பழத்திலிருந்து செய்ததே [19]: அவள் பாக்கியசாலியாயின் ஒருபோதும் இம்மூரனைக் காதலித்திருக்கமாட்டாள். பாக்கியம் பெற்ற பிட்டு [20]! அவனது உள்ளங்கையில் அவள் அளைந்ததை நீ பார்க்கவில்லையா [21]? அதனைக் கவனிக்கவில்லையா நீ?

ராட:—ஆம், அதனைப் பார்த்தேன் நான்: மற்று, அது வெறும் வினயந்தானே.

இயா:—இந்தக் கைகள் சாக்ஷியாக, போக்கிரித்தனம்[22]! காமமுங் கெட்ட எண்ணங்களுங் கூடிய ஒரு சரித்திரத்தின் அடையாளமும் மறைவான பாயிரமும் [23]. தாம் விடும் மூச்சுக்கள் கூடி முயங்கும்படி அத்துணை நெருங்கி அவ்விருவரும் தம் உதடுகளைக்கொண்டு சந்தித்தனர்[24]. துன்மார்க்க எண்ணங்கள், ராடரிகோ! இந்தப் பரஸ்பர பாவனைகள் இப்படி வழிகாட்டிச் செலுத்தும்போது, ஐக்கிய முடிவாகிய தலைமையும் முக்கியமும் ஆன அப்பியாஸம் கைக்கருகு வந்துவிடுகின்றது [25]. சீ! சீ! நீயோ, ஐயா, என்னால் ஆளப்பெறு. உன்னை நான் வெனிஸ் நகரிலிருந்து கொணர்ந்திருக்கின்றேன். இன்றிரவு நீ காத்திரு; கட்டளையோ நானே உனக்கு இடுவேன். காஸ்ஸியோ உன்னை அறியமாட்டான். உன்னின்று நான் அதிகம் விலகியிருக்கமாட்டேன்- மிக இரைந்து பேசியோ, அல்லது அவன் ஒழுக்கமுறைக்குப் பழுதுசெய்தோ, அல்லது, வாய்க்கின்ற சமயத்திற்கு ஏற்றவாறு உனக்கு இஷ்டமான வேறு எவ்வழியிலோ, காஸ்ஸியோவைக் கோபமூட்டுவதற்கு யாதேனும் ஒரு சந்தர்ப்பம் தேடிக்கொள்[26].

(8) அவசியமான இவ்வசதிகள் = ஆசை நிலைத்திருப்பதற்கு அவசியமாகிய, வயது ஒழுக்கம் அழகு முதலியவைகளில் ஒத்திருத்தல்.

(9) ஒருமுறை ஒத்தெல்லோவைக் காதலனாகத் தான் தேர்ந்துகொண்டது பெரும்பிழையானது கண்டு, மறுமுறை வேறோர் காதலனை அவள் தேடிக்கொள்ளப் புகுவதே இயற்கை—என்பது பொருள்.

குறிப்பு:—தற்காலம் Psycho-analysis என்று வழங்கப்படும் மானத சாஸ்திர ஆராய்ச்சியாளர் மானுடஇயற்கையைப் பற்றிக் கூறுகின்ற முடிவிற்கும் இந்த இயாகோவின் முடிவிற்கும் வேற்றுமை அதிகம் இல்லையென்பது இங்கு அறிந்துகொள்ளத் தக்கது.

(10) இது = மானுட இயற்கை இத்தகையதே என்னும் முடிவு. கர்ப்பமுள்ளது = அர்த்தபுஷ்டி யுள்ளது. வலியாமற் பெறுவது = எளிதில்எய்தவல்லது. அதிர்ஷ்டத்தின் படிகள் = டெஸ்டிமோனாவை அடைகின்ற அதிர்ஷ்டத்தைத் தொடர்ந்து ஏறுகின்றவர்களில் காஸ்ஸியோவே அவளுடைய ஆசையில் உயர்ந்திருக்கின்றான்—என்பது பொருள். அல்லது, அதிர்ஷ்டம் என்பது காஸ்ஸியோவிற்கு வாய்த்திருக்கின்ற இளமை அழகு முதலியவைகளைக் குறிப்பதாகவுங் கொள்ளலாம்.

(11) வினயமுடைய ஒருவனேபோல் அவன் தோன்றுவதெல்லாம், டெஸ்டிமோனாவை அடைந்து காமச்சுவை துய்க்கவேண்டுமென்று மிக இரகசியமாகக் கொண்டிருக்கும் தன்கருத்து நிறைவேறுவதற்காகப் பூண்டிருக்கின்ற வெளிவேடமே யொழிய, மனச்சாக்ஷியின்படி நடப்பவனல்லன் காஸ்ஸியோ; ஆயினும் தன் சொல்லின் திறமையால், தன்னை நல்லவன் என்று பிறர் மதிக்கும்படி வஞ்சித்துவிடுகின்றான் அக் கீழ்மகன்—என்பது பொருள்.

(12) முன், "யார் நிற்கின்றார்" என்று கேட்டதற்குத் தானே கூறுகின்ற விடை இது.

(13) சூழ்ச்சி மிகுந்தவனாகையால், பிறர் கைக்கு அகப்படாமல் எப்படியும் நழுவிவிடுவான்- என்பது பொருள்.

(14) தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு உரிய சமயமும் மற்ற அனுகூலங்களும் வாய்க்காவிட்டாலும், தானே தன் சூழ்ச்சித்திறமையால் அவைகளை ஏற்படுத்திக்கொள்ளவும், அவ்வனுகூலங்களை அடைந்தவன் போல் பொய்யாக நடிக்கவும் என்ன செய்யலாம் என்பதிலேயே எப்பொழுதுங் கண்ணுங் கருத்துமாயிருப்பவன்- என்பது பொருள்.

(15) முதிராத மனமுடைய பேதை மாதர் ஆசைப்படுகின்ற அழகு இளமை முதலியவைகளெல்லாம் அவனிடம் இருக்கின்றன—என்பது பொருள்.

(16) டெஸ்டிமோனாவும் தன் பெண்மையின் சபலத்திற் கேற்க, அவனே தனக்குத் தகுந்தவன் என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டாள்—என்பது பொருள்.

(17) தான் அடைந்துள்ள பாக்கியத்தால் மனம்நிறைந்திருக்கின்ற இவள் ஒருபொழுதும் காஸ்ஸியோவை நாடமாட்டாள்—என்பது பொருள்.

(18) அற்பமென்று எள்ளிப் பேசுவதற்கு அத்திக்காயைக் கூறுவது ஆங்கிலமரபு.

(19) ஒயின் = Wine. எல்லோருங் குடிப்பதைத்தான் அவளுங் குடிக்கின்றாள், எல்லோரும் உண்பதைத்தான் அவளும் உண்ணுகின்றாள். ஆகையால், எல்லோரையும் போலத்தான் அவள் மனமும் அவளை இயக்கும் — என்பது பொருள்.

(20) பிட்டு = மாவினாற்செய்யும் பணிகாரம். பிட்டைப் பார்த்துப் பாக்கியசாலி என்று அழைப்பதற்கு நிகரான மதியீனமாம், டெஸ்டிமோனாவைப் பாக்கியசாலி என்று அழைப்பதும் —என்பது கருத்து.

(21) அளைந்தது = டெஸ்டிமோனா தன் விரல்களால் காஸ்ஸியோவின் உள்ளங்கையைக் குடைந்து தடவியது.

(22) 'கைகள் சாக்ஷியாக நிச்சயம்' என்று வற்புறுத்துவது ஆங்கிலமொழி மரபு. காஸ்ஸியோவின் கையை டெஸ்டிமோனா அளைந்தது வெறும் வினயந்தான் என்று ராடரிகோ கூறியதை மறுத்து, அது முழுப் போக்கிரித்தனம் என்கின்றான் இயாகோ.

(23) பாயிரமும்,...அவன் கைகளை அளைந்ததுஆகும், என்று முடித்துக்கொள்க. காமம் சூழ்ந்தகெட்டஎண்ணமுடையவர்களாகிய இவர் இனிச்செய்யஇருப்பனவற்றை முன்னே அறிவிக்கின்ற அடையாளமே, இன்று இவள் அவன் கையைக் குடைந்த அச்சிறு காரியம் ஆகும்—என்பது பொருள். பாயிரம் = ஒருநூலினுள் அடங்கியவற்றை முதலில் சுருக்கமாக எடுத்துக் காட்டிப் பாடியிருக்கும் பாகம்.

(24) முன் டெஸ்டிமோனாவும் காஸ்ஸியோவும் நெருங்கி இரகசியமாகப் பேசிக்கொண்டதைக் குறிக்கின்றது இது. இயாகோ மாதர்களைப் பழித்துரைத்ததைப்பற்றி ஏதேனும் தமக்குள்ளே மெல்லச்சொல்லிக்கொண்டதாக இருக்கலாம் அப்பேச்சு. ஆயினும், இயாகோ தன் இயற்கைப்படி அதனை இப்படித் திரித்துக் காட்டுகின்றான்.

(25) பரஸ்பர வினயங்கள் காட்டிக்கொண்டுவந்து மிக விரைவில் தமக்கிடையே சரீரசம்பந்தமும் ஏற்படுத்திக்கொண்டுவிடுவார்கள்—என்பது கருத்து.

(26) காஸ்ஸியோ இன்றிரவு காக்கவேண்டிய காவல் முற்றத்தில் நீயுங் காத்திரு. இந்தக் கட்டளையை நானே உனக்கு இட்டதாகக் கொள். காக்கும்பொழுது ஏதாவது ஒரு நிபத்தைத் தேடிக்கொண்டுஅக்காஸ்ஸியோவிற்குக் கோபம் உண்டாகும்படி செய்— என்று இயாகோ தான் கருதிய சூழ்ச்சியைச் செய்யத் துவக்குகின்றான்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

7-ம் பத்து, 6-ம் தசகம்

[253-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பாசுரம்

என்னுடைய கோவலனே
 என்பொள்ளாக் கருமாணிக்கமே
உன்னுடைய வுந்திமலரு
 முலக மவைமூன் றும்பரந்
துன்னுடைய சோதிவெள்ளத்
 தகம்பா லுன்னைக் கண்டுகொண்டிட்
டென்னுடை யாருயி ரெங்ஙனே
 கொல்வந் தெய்துவரே.

குறிப்புக்கள்:—கோவலனே - கோபாலனே என்ற பதத்தின் திரிபு. பொள்ளா-துளைபோடாத, அதாவது முழு தேஜஸுடன் விளங்குகிற நீலமணியே; உலகம் அவை மூன்றும்-ஸத்வ ரஜஸ தமஸுக்கள் கலந்த உலக விஷயங்கள் மூன்றின் உள்ளும்; பரந்து - இவ்வுலக விஷய இன்ப நுகர்ச்சியில் அகப்பட்டு உழன்ற பிறகு, உன் அகம்பால் - உன்னுடைய வைகுண்டத்தில் உன்னை, எங்ஙனே-எப்படி என் ஆருயிர் கண்டுகொண்டு எய்துவர் - உலகங்களிலுள்ள விடயஇன்ப நுகர்ச்சியில்அகப்பட்டு அதிலே ஊன்றி மிக ரஸமாய் இடைவிடாமல்அநுபவிக்கும் இந்தஆத்மாவா உன் ஜோதிஸும் தேஜஸும் நிறைந்து தீப்தமாய் ஜ்வலித்துவிளங்கும் வைகுண்டத்தில்எப்படி ஏகக்கூடும். தம் ஜீவாத்மாவைப் பரிகசமாய்க் கௌரவப்படுத்திப் பன்மையிற் பேசுகின்றார். ஆழ்வார் தம்மைத் தாமே "நீவிர் தவம் இயற்றி மோக்ஷ ஸாதனமாய் முயற்சி செய்ய வல்லவர் அல்லவோ" என்று வினவிக்கொண்டு அந்தச் சங்கைக்குத் தாமே பதில் சொல்கின்றபடி. உலகவிஷய நுகர்ச்சியெல்லாம் பகவான் உலகருக்கு ரஸமாய் அநுபவிக்கப்படைத்தவையாயிருக்க அவைகளில் தோய்ந்து ரஸாநுபவம்செய்வது வெகுஸஹஜமல்லவோ? அதில் உழன்று மேல்செல்ல அசக்தனாயிருக்கும் இவ்வாத்மாவானது தன் பிரயத்தனத்தாலிந்திரிய ஜயத்தை அடைந்து தனது மோக்ஷத்தைத் தானே ஸாதித்துக்கொள்ளக்கூடுமோ? "கூரைஏறிக் கோழிபிடிக்காதவன் வானமேறிப் பின் வைகுண்டம் காட்டுவானா" என்ற பரிஹாஸ வார்த்தைபோல் தம்மைத் தாமே இப்பாசுரத்தில் நிந்தித்துக் கூறிக்கொள்கின்றார்.

அதாவது, இந்திரியங்களை விஷயஇன்பநுகர்ச்சியிலிருந்தும் இழுத்துஅடக்கவோ ஸாத்தியம்இல்லாதவர்போலப் பேசுவது, தம் தாழ்மை ஸுபாவம் பற்றி என்று நாம் கொள்ள வேண்டும். உண்மையில் 6-ம் பத்தின் இறுதியில் ஆழ்வார் பகவானின் ஆணையைச் சிரஸின்மேல் கொண்டு "பிரபத்தி" உபாயமாகிய சரணாகதியைத் தமக்கு மோக்ஷம்கிடைப்பதின் நிமித்தமாகத் திருவேங்கடமுடையானிடம் அநுட்டானஞ் செய்ததை முன்னே கண்டோம். பின்னையும் மோக்ஷ ஸாதனத்தை மேற்கொண்டு இவர் கைப்பற்றுபவர் போல் உரைப்பானேன் என்ன—தாம் செய்த உபாயம் வெகு ஆழ்ந்து மனமடி தொட்டுக் கவர்ந்து உணர்வுடன்செய்த தவமுயற்சியானாலும் பெரிய காரிய நிர்வாஹத்துக்கு இது அல்பஹேது; பகவானின் இன்னருளே அதைத் தலைகட்டி வைப்பது. மிகப் பெரியதாய் அல்ப யத்நத்தினால் கைக்கு அகப்படாதது பரம்பொருள் என்றதிருவுள்ளம்பற்றித் தம்மைத் தாழ்த்திக்கொண்டு நைசகியாநுஸந்த ரீதியாய்த் திருவாய் மலர்ந்தருளியபடி என்று கொள்ளவேண்டும்.

விசேஷக் குறிப்பு:-சாஸ்திரார்த்தமும் மேற்கண்டபடி ஆழ்வாரின் திருவுள்ளப்படியே இருப்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். இம்மஹான் அநுட்டானம் செய்த "பிரபத்தி" என்கிற சரணாகதியுள்பட 32உபாஸநங்களாம் பக்தியோகத் தவமுறைகளை, உபநிஷத்துக்கள் பக்தர்களுக்கு விதித்தது பக்தனுடைய கடமையை விவரித்தபடி; இதுவே மோக்ஷமாகிய பலஸாதநத்தை ஈட்டிக்கொடுக்கச் சக்தியற்றது. ஏனெனில் ஈசுவரன்ஸ்வயேச்சா பிரபு. சாந்தோக்

கிய உபநிடதத்தில்,பகவான் "யமேவைஷ விருணுதே' (அதாவது எவனை ஸ்வயம் பிரபுவானவன் கூப்பிட்டு வரிக்கிறானோ அவனுக்கே மோக்ஷம் ஸாம்ராஜ்ஜிய ஆநந்தமேற்று ஸம்பவிக்கும்)என்று நன்கு அறுதியிட்டிருக்கின்றது. கீதாசாரியனான பகவானும் "ஸர்வதர்மான்பரித்யஜ்ய மாமேகம் சரணம் விரஜ" வென்று கல்பித்தனர். (அதாவது எல்லாத் தருமங்களையும் - பக்தி உபாஸநத்தையோ பிரபத்தி உபாஸநத்தையோ அநுட்டானம் செய்து அதின் பலத்தை விட்டுவிடு, அதாவது "அவைகள் பலஸாதநமென்கிற புத்தியை ஒழித்து விடுக" வென்று பரம்பொருளே கட்டளையிட்டபடி.) இதுவே கீதாசாஸ்திரத்தின் திரண்ட பொருளென்று ஆழ்வாரை முற்று முணர்ந்து ஸேவித்துக் கடாக்ஷம் பெற்ற உத்தம பக்தரான யாமுநாசாரியார் மேல்கண்ட கட்டளையையே "உபாயதாம் பரித்யஜ்ய நிக்ஷேபேத் தேவ து தாமபி" என்று சங்கிரஹித்தார். சுருக்கமாக—"உபாயத்தை அநுசரித்து அநுட்டானம் செய், அதுவே மோக்ஷ பலத்துக்குக் காரணம் என்ற புத்தியை ஒழித்துவிடு, இதில் சங்கையும் பயமும் கவலையும் வேண்டாம்; பலம் பகவானிஷ்டப்படி நேரிடும், ஐயமில்லை." என்பது பொருள்.

6-ம் பாசுரம்.

வந்தெய்து மாறறியேன் மல்கு
நீலச்சுடர் தழைப்பச்
செஞ்சுடர் ஜோதிகள் பூத்தொரு
மாணிக்கஞ் சேர்வதுபோல்
அந்தரமேல் செம்பட்டோ டடியுந்தி
கைமார்பு கண்வாய்
செஞ்சுடர்ச் சோதி விடவுறை
யென்றிரு மார்பனே.

உரை:—தன் யத்நத்தாலே பகவானை அடுத்துச் செல்லவொண்ணுதென்றவர்,வந்துஎய்தும் ஆறுஅறியேன்-எவ்விதச்சூழ்ச்சியால் அவன்ஸேவை கிடைக்குமென்று தெளியவில்லை யென்பர். இவ்வாறுனால் அதனைவேண்டிமனவேதனைப்படாமல்ஒழிந்துவிடக்கூடாதோவென்ன, மல்கு - நெருங்கிய, நீலச்சுடர் - மஹாநீல தேஜஸானது, தழைப்ப-செழிப்பானமரம்போல் எல்லாப் பக்கங்களிலும் தளிர்போன்ற ஒளி வியாபித்து விளங்க - ஆழ்வார் திருவுள்ளத்தில் பகவானின் திருமேனியினின்று நீலகாந்தி கொழுத்துத் திரண்டு ஓரே தேஜஸாய் ஓங்கிப் பரவி நிற்பதை இப்பாசுரம் கூறுகின்றது. இதன்மேலே போட்டி போடுவனபோல் அங்குமிங்கும், தாம் இப்பாசுரத்தினில் குறிக்கிறபடி, செஞ்சோதி- மாணிக்கம்போல் சிவப்பான சோதியானது, பகவானின் திருவுடம்பிலே, ஆங்காங்கு மேல்கண்ட நீலச்செழு மரத்தில் பூக்கள் பருவத்தில் செழிப்பாய் விகஸித்தாப்போல், செம்பட்டு - பகவான் திருமேனியின் அரையில் சாத்தியிருக்கும் பீதாம்பரச் சிவப்புப் பட்டும். அடி - சிவப்பான திருவடியும், உந்தி - திருவயிற்றில் நாபி கமலமும், கை-திருக்கைகள், மார்பு - இலக்குமி பிராட்டி விஹலிதமான திருமார்பு, கண் - திருக்கண்கள், வாய்-உதடுகள், செஞ்சுடர்ச் சோதியைவிடுகின்றன.

அவதாரிகை:—முன்னேயே மூன்றும் பாசுரத்தில் "கொன்றைச் செஞ்சடையாய்" "வாய்த்த நான்முகனே" என்று மஹேசுவரனையும்,நான்முகப் பிரம்மாவையும்-அதாவது இவர்களுக்கு அந்தராத்மபூதனைப்பிரவேசித்து அவர்களுக்குச் சுவரூபஸ்திதியையளித்தவனே என்று சொல்லியாயிருக்கஇப்பாசுரத்தில் இதையே விவரிப்பது புனர்உக்தியாகாதோவென்ன, இப்பாசுரத்திற்கு, அவர்களுக்கும் இந்திரனுக்கும் அனுகூல தாம்பத்தியமும் (தக்க பதநி) அதாவது அநுபவிக்கப் போகமும் மனனம் செய்து ஊர்ஜிதமாய் ஐம்பொறிகளையுமடக்கி இந்திரியஜெயம் பெற்றுத் தவமியற்றி உலகசிருஷ்டிக்குத்தக்க சக்தியையும் பிரம்மாவுக்கும், திரிபுரங்களை எரித்து அசுரகோஷ்டிகளைத் தொலைக்க மஹேசுவரனுக்குப் பௌர்ஷமும் இந்திரனுக்கு உலகங்களைப் பாதுகாக்க வீர்யமும் கொடுத்ததைத் தனியாக எடுத்துப் பிரஸ்தாபிப்பதில் இலக்கு. பின்னே பகவான் வராஹ அவதாரத்தில் திருக்கோட்டில் பூமிப்பிராட்டியை ராஸாதளத்திலிருந்து எடுத்துக் காப்பாற்றியதை உரைத்தது. தானும் பௌர்ஷத்தால் பத்நியை (பூமிபிராட்டியை) எடுத்தது, ஸமரஸமாய் அநுகூலதாம்பத்தியத்தை அநுபவிப்பதாகக் கூறுவது, தனக்குப்போலே மஹேசுவரனுக்கும், நான்முகனுக்கும் இந்திரனுக்கும் ஓரே ஸமமாய் அஸூயை எள்ளளவுமில்லாமல் கிருபாகடாக்ஷம் செய்த ஔதாரியத்தைப் பேசுகிறபடி.

பொழிப்புரை:–உன் போகவிருத்திகள் உன்னுடை அதீனமானுப்போல் பிரம்ம ருத்திராதிகளின் போக விருத்திகளும் உன்னுடைய அதீனமே - ஆனபின்பு என் கோரிக்கையும் நீ நிறைவேற்றித் தரவேண்டும். இப்படி இருக்க நீ எனது அபேக்ஷைக்கு இணங்கி அநுகூலிக்கவில்லை. நான் உன்னைக் காணப்பெறுதே போமத்தனை யாகாதோ, என்கிறார்.

தீப்தமாகச் சிவந்து பிரகாசத்தைவீசும் என் திருமார்பனே, மஹா இலக்குமி உறையும் திருமார்பை உடையவனே! உறை - நீ கிடந்து கண்வளர்கின்றாய்- இக்காட்சியைஉடனே பிரத்தியக்ஷமாய் வெளிக்கண்ணாலேயே காணவேண்டுமென் றாசையை யுண்டாக்குகின்றது. ஆனால் அதை யடைய வழிதெரியவில்லை யென்று சோகிக்கிறார்.

குறிப்பு:—இங்கு ஆழ்வார் உள்ளத்தில் தோய்ந்த திருவுருவம் வைகுண்டத்தில் உள்ள அஸாதாரணமான திவ்விய மங்கள விக்ரஹ மல்லவென்று தீர்மானிக்கவேண்டி வருகின்றது. அங்குள்ள பிராட்டிமார்கள் கெருட அனந்த ஸேனேசர் முதலியவர்களைக் குறிக்காததினுல் வேறொரு திவ்வியக்ஷேத்திரத்தில் ஸேவைஸாதிக்கும் திவ்விய மங்களவிக்ரஹமாயிருத்தல் வேண்டும். ஆழ்வார் முன்னைய தசகத்தில் இராமபிரானிடத்திலேயே மிகுதியும்ஈடுபட்டிருந்தது கண்டோம்-இப்பாசுரத்திற்குப் பிந்திய 8-ம் பாசுரத்திலும் இராமபிரான் இலங்கைக்குச் சென்றதை வர்ணித்து 9-ம் பாசுரத்தில் இலங்கா ராஜ்யத்தை விபீஷணனுக்கு "விரிநீரிலங்கையை" யருளினதைப் பிரஸ்தாபிப்பதால் திருவரங்கத்தில் திருக்கோயில்கொண்டிருக்கும் அரங்கநாதப்பெருமானின் ஸேவை இம்மஹானைமோஹிப்பித்ததென்றுகொள்ளவேண்டும்- இந்தஸேவை அந்தராயமாய்த் தோன்றியஸம்பவம்.

கம்பர் சிருட்டியில் பிறந்த கற்பினள்

[252-வது பக்கத் தொடர்ச்சி]

ஸ்ரீராமபிரானே திருமாலின் அம்சம். தேவர்கள் வேண்டுகோளுக் கிணங்கி அவதரித்தவன். அவனே பின்வரும் கிருஷ்ணவதாரத்தில்,

"நல்லார்கள் தம்மை நலம்புரிந்து காத்தற்கும்[லாரு
பொல்லாரைப் பொன்றுநெறி போக்கற்கும்–சொல்
முந்தை யறநாட்ட முப்பத்தற்கும் நான்பிறப்பன்
இந்தவுகந் தோறு மிசைந்து"

என்று கீதையில் கூறியுள்ளபடி,நல்லாரைக் காக்கவும் தீயாரைப் போக்கவும் பிறந்தவன். நல்லார் இன்னரென்றும் தீயா ரின்னரென்றும் அவன் அறியாதவனல்லன். அகலிகையைத் தீயவளென்று அவன் எண்ணியிருந்தால்,அவன் அவளை ஆட்கொண்டிருக்க மாட்டான். அவளுக்கிட்ட சாபத்தின் முடிவு ஆட்கொள்ளுதலே என்று கூறாவிர்களானல் அவன் மனமறியக் குற்றம்செய்தவளாயின் இறைவனைத் தரிசிக்கும் பேறுபெறும் முடிவுடைய சாபம் முனிவர் தந்திருக்கமாட்டார். அதுநிற்க. ஸ்ரீராமபிரான் அவள் வரலாறு கேட்டதால் குற்றமாகவேனும் எண்ணினனோ வென்று நாம் அறிவதற் கேற்றபடி கம்பர் எங்கும் வைத்திலர்.

உண்ட பேதைமை மயக்கற உருவம் வேறுபட்டுப் பண்டை வண்ணமாய்ப் போயின உவகையோடு மின்னென ஒதுங்கி நின்ற அகலிகையைத் தீவினை நயந்து செய்த தேவர்கோன் தனக்குச் செங்கண் ஆயிரம் அளித்தோன் பன்னி என்று விசுவாமித்திரர் ஸ்ரீராமபிரானுக்குக் காட்டினர். காட்டக் கண்ட பூமிகேள்வன், என்னையே என்னையே இவ்வுலகியலிருந்த வண்ணம் முன்னையூழ் வலியினலோ, நடுவொன்று முடிந்ததுண்டோவென்று ஆச்சரியப்பட்டானாய் "அன்னையேஅனையாட்குஇவ்வாறுஅடுத்தவாறுஅருளுக" என மிக்கஆவலுடன் கேட்கிறான். கேட்கின்றவனே திருமால்;அவன் அன்னை யென்று பல்லவி பாடுகின்றான். கடவுளென்ற நினைவுமாறி மனிதனைப் போல் பேசுகின்றானென்பார்கள். மனிதனைப் போல்பேசுகின்றானென்றாலும்,உண்மைவழி யொழுகும் செவ்விய திருவுள்ள முடையவன். மகருஷியும் 'செவ்வி போய் கேட்டி' என்கின்றார். செவ்விய திருவுள்ளத்தோர்கள் நல்லார்பொல்லார் இன்னர் என்று நன்கு தெளிவார். இதற்குக் கடவுள்நிலையும் தேவையில்லை. ஒழுக்கமுடைமையேபோதும். ஸ்ரீராமபிரானுடைய மனம் நன்னெறியேபுகுதலுடையது என்று ஸ்ரீராமனே தெரிவிக்கிறார்.மிதிலைவீதியாய் மூவரும் சென்ற நாள் கன்னிமாடத்தில் தான் ஓர் கன்னிகையைக் கண்டு காதல்கொண்டு இரவுவர அதேசிந்தனையிலிருக்குங்கால்தான் கண்டபெண் பிறர்மனைவியா யிருத்தல் கூடுமோ, அவ்வாறாயின் தன்மனம் காதலிக்குமோ என்று ஐயுற்று,

"ஆகு நல்வழி அல்வழி யென்மனம்
ஏகுமோவிதற் காகிய காரணம்
பாகு போன்மொழி பைந்தொடி கன்னியே
ஆகும் வேறிதற் கையுற வில்லையே"

என்கிறார்.என்மனம் நல்வழி ஆகும் அல்வழி யேகுமோ, ஏகாது; பாகுபோன் மொழி பைந்தொடிபால் என்மனம் ஏகியதன் காரணம் நான் காதலித்தவள் கன்னியே ஆகும்.வேறிதற்குஐயுறவில்லை என்கிறான். இதனால் தனதுமனம் செவ்விய வழியே செல்வதாம் என்று தன் மனத்தையே தர்மசாக்ஷியாகக் கொண்டவொருசெவ்விய திருவுள்ளமுடைய ஸ்ரீராமபிரானால் அகலிகையானவள் 'அன்னையே அனையாள்' எனக் கூறப்பெற்றிருப்பதால் அவ்வகலிகை ஸ்ரீராமனுக்கு அன்னையாதற்குரிய எல்லாச் சிறப்பியல்களுமுடையவோர் பெண்தெய்வமென்றே கருதுதல் வேண்டும். தவிர,

ஸ்ரீராமபிரான் அகலிகை வரலாற்றை அறிவதற்கு முன் அவன் செவ்விய இயற்கைக்கு ஏற்றவாறு அவளை 'அன்னையே அனையாள்' என மதித்தான்; வரலாறு அறிந்தபின் அவ்வாறு அவன் அவளை மதித்தற்கிலாது என்று நாம் ஐயுறற்குமின்றி விசுவாமித்திரரால் சரித்திரமுழுவதும் சொல்லக்கேட்ட பின்னும் அவன் அகலிகையைப் பார்த்துப்"படருறுதே" (வருந்தாதே) 'மாதவனருளுண்டாக வழிபடு' என்றதோ டமையாமல் 'போது நீ யன்னை' என்கின்றான். தாயே நீ போவாய் என்கிறான். முன்னே'அன்னையே அனையாள்' என்றவன் அதாவது தாயைப் போன்றவள் என்றெண்ணியவன் வரலாறுகேட்ட பின்னர்த் தாயை ஒத்தவள் என்னமல் நேரே 'தாய்' என்றே அழைக்கிறான். அவ்வளவோ டில்லாமல்'பொன்னடி வணங்கிப் போனான்' என்கின்றார். இதனால் ஸ்ரீராமபிரான் தாயென மதிக்கும் கற்பும் அவனே வணங்கவல்ல தெய்வமுமாக அகலிகை விளங்குகின்றாள்.

இவ்வாறுமதித்தற்கேற்றபடியேதான் மாதவனும் சொல்லினன், இராமபிரானும் கேட்டான், என்று கற்போர்கருதவே கம்பர் "கரியசெம்மல்கோதிலாக் குணத்தான் சொன்ன பொருளெல்லாம் மனத்திற்கொண்டு" என்று கூறுவதால்,வரலாறு கேட்டபின் நடந்துகொண்ட மதிப்புக்குரிய பொருளுடையதாகவே சொன்னான் என்பது போதரவே விசுவாமித்திரரைக்'கோதிலாக்குணத்தான்'என்றார். மேலும்"சொன்ன சொல்லெல்லாம் செவியாற்கேட்டு"என்னமல் "சொன்ன பொருளெலா மனதிற்கொண்டு" என்று குறிக்கிறார். அக்குறிப்பினை விளக்கவே நடத்தையில் நம் போன்றார்க்குக் காட்டினன். ஆகையா லிராமன் அகலிகை வரலாறு கேட்டபின்னர் வணங்கத்தக்க அத்தகைய சிறப்போடுகூடிய பொருளுடையதாக விசுவாமித்திரர் சொன்னதாகக் கூறப்பட்டுள்ள கம்பர் பாக்களுக்கு அகலிகையின் கற்பில் பழுதுளதாக வேறுபொருள் கூறுவது கம்பர் கொள்கைக்கு மாறுபடுவதாகும்.தம்ராமாயணத்தினுள் கம்பர் பொதுளவைத்திருக்கின்ற பொருளை அவர் கருத்தோடு நாம் இணங்கிப் பார்ப்பதற்கு அவரே ஒரு திறவுகோலும் வைத்துக்கொண்டிருக்கிறார்.அத் திறவுகோல் எது? எங்குளது? என்று ஆய்ந்து பெற்றுவிட்டோமானால் இராமாயணப் பெட்டியைத்திறந்து அதனுள்ளிருக்கு மின்பத்தை அனுபவிக்கும் நல்ல பாக்கியத்தை நாம் அடைந்தவராவோம். அப்பெட்டியினுள் ஓர் அறைபோன்றது அகலிகைப்படலம்(வரலாறு)அதன் திறவுகோலும் அவரிடத்தேதான் பெறவேண்டும். ஆயினும்நாம் இதுகாறும் ஆராய்ந்தவற்றால்,இவ்வரலாற்

றின் திறவுகோல் எதுவென்று கவனித்தால்“மாசறு கற்பின் மிக்க அணங்கு” ஆமெனை, குன்றின்மேலிட்ட விளக்கென நன்கு தெரிந்துகொள்ளலாம்.இத்திறவுகோல்கொண்டுதான் அகலிகைவரலாற்றைத் திறந்து நாம் காணவேண்டும். ஆதலால் கம்பர்வரையில் ‘கற்பின் மிக்க அணங்கு’ஆனவள் ஸ்ரீராமபிரானால் அதனினும் ஒருபடி உயர்ந்து தெய்வந்தொழும் தெய்வமானாள்.பிறர்நெஞ்சு புகாப் பத்தினிப் பெண்டிர்கள் நிறைந்த நந் தமிழ்நாட்டிற் பிறந்த கம்பரால் ஆக்கப்பட்ட ‘ஆசலம்புரி யைம்பொறி வாளியும் காசலம்பு முலையவர்கண்ணெனும் பூசலம்பும் நெறியின் புறஞ்செலாக் கோசலத்தில்” பிறந்தவன் ஸ்ரீராமபிரானாதலால் கற்பிழந்தாளைக்காணின் கலங்குமுள்ளத்தவனா வானென்றறிருந்த கம்பராலவள் கற்புடையவளாக்கப்பட்டாள். மேலும் இதன்பின் சில தினங்களில் தற்செயலாய்த் திருமணம் நடக்கவேண்டியிருத்தலாலன்னதற்கு அண்மையில் கற்பிழந்தாளைக் காண்பது உற்பாதமும் ஆகும் என மாற்றப்பட்டதுபோலும். தவிர மணக்கப்போகும் பெண்ணோ ‘வரம்பில் பேரழகினாள்” அதற்கேற்பவே இடையில்கண்ட இவளையும் பேரழகியாக்கினார். மணக்கப்போகும் பிராட்டியோ“கற்பினுக்கணி”,இவளோ‘மாசறு கற்பின் மிக்கவள்’; அந்தப்பிராட்டியோ “கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கி......பூவினைதுங்கிப் பொலிகின்றாள்.” இவளோ ‘மாசறு கற்பின்மிக்க அணங்கு’ என்கிறார். இவ்வாறு பெருமான் மணக்கப்போகும் திருமணத்திற்குச்சுபசகுனமாக,தான் மணத்தற்குரிய பிராட்டியின் இலக்கணங்க ளமைந்த பேரழகியாகவும்,பெருங் கற்பினளாகவும்,தொழுந்தெய்வமாகவும் கம்பரால் இவள் காட்டப்பட்டாள். இத்தனை வகையில் கம்பர்முயன்று புதிய அகலிகையைச் சிருட்டித்தது ஸ்ரீராமபிரான் திருமணத்தின் முன்னர்க் கற்பிழந்த தீயவளைப் பெருமான் காணுதல் வேண்டாமென்ற அன்பின் பெருக்காலாகும். இத்தகைய கல்விக்கரசரும் கவிச்சக்கரவர்த்தியும் ஆகின்ற நம் தமிழ்நாட்டுச் செந்தமிழ்ச் செம்மனப் புலவரை என்னென்ப் புகழ்வோம். அன்னவரை யோர்பாடலால் ஈண்டு வழுத்தி வணங்கிவிட்டு மேலே செல்லுவோம்.

“ ஆதவன் புதல்வன் முத்தி
யறிவினை அளிக்கு மண்ணல்
போதவன் இராம காதை
புகன்றருள் புனிதன் மண்மேல்
கோதவர் சிறிது மில்லான்
கொண்டன்மால் தன்னை யொப்பான்
மாதவன் கம்பன் செம்பொன்
மலரடி தொழுது வாழ்வாம் ”

—செந்தமிழ்ப் பத்திரிகை

சூரியன்

[255-வது பக்கத் தொடர்ச்சி]

V. சூரிய குடும்பம்

4. செவ்வாய்

சேயின்
ஒள்ளொ ளிப்பொலந் தேர்சிலை யுமிழ்கடுங் கணையைச்
எள்ளு வாம்புரி யெட்டுட ணிலங்கிடு மன்றே

—இலிங்கபுராணம்

அளவு:— நமது பூமாதேவியின் புதல்வன் என்று பொருள்தரும் குஜன் என்ற பெயரோடு விளங்கி, பூகாரகன், என்றுசோதிடர்களால் சிறப்பிக்கப்படும் அங்காரகனே, அடுத்தாற்போல இருக்கின்றான்.இவனைச் செவ்வாய் என வழங்கிவருகிறோம். இக்கோள் சூரியனுக்கு ஏறக்குறைய 141,000,000 கல் தூரத்தில் இருக்கின்றது. இதன் குறுக்களவு 4,200 கல்லாகும். நமது பூமியைக்காட்டிலும் உருவத்தில்சிறியது. இதன் எடை பூமியின் எடையில் ஒன்பதில் ஒரு பங்கு. பூமியைக்காட்டிலும்,சூரியனுக்கு வெகு தூரத்தில் இருப்பதனால், அங்கிருந்து சூரியனைப் பார்க்கும்போது, சூரியனளவு, நமக்குக் காணப்படுவதில் அரைப்பங்களவிலும் குறைந்தே (45%) தோன்றும். அதற்கேற்பச் சூரியோஷ்ணமும் குறைந்தே பாயும். இது, பூமிக்கும் அப்பால் இருக்கும் புறக்கோளாதலால்(Superior Planets), சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் முதலியவற்றைப் போலவே, நம் பூமியைச் சுற்றிவருவதுபோல நமது கண்ணிற்குத் தோன்றுகிறது. இது செக்கச் சிவந்த கிச்சிலிப்பழத்தை ஒக்கும். இதனாலன்றோ,இதனை,நம்மவர் செவ்வாய் என வழங்குகின்றனர். இக்கோளம், சூரியனைச் சுற்றிவருவதற்கு இரண்டு வருஷங்கள் (687 நாட்கள்) பிடிக்கின்றன. அங்குள்ள ஆகருஷண சக்தி, நமது பூமியினுள்ளதில், மூன்றில் ஒரு பங்கே யாகும். இங்கே, மூன்றடி உயரம் குதிக்கும் சிறுவன், அங்கே பத்தடி உயரம் குதிப்பான். ஆகையால்,அங்குள்ளார் ஓடியாடித் திரிய,அக்கோளம், மிக உதவிசெய்கின்றது. அங்குள்ளோர், சுறுசுறுப்புள்ளவர்களாய், நாகரிகத்தில் முன்வந்திருத்தல், இதனாலேயே போலும்.

தூரதிருஷ்டிக் காட்சி :—இவ்வங்காரக கோளத்தைத் தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியே கண்டு களிப்பது, மூன்று நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வரும் ஓர் ஆராய்ச்சியின் அநுபவமாகும். இதனை,1610-ம் வருஷத்தில், கலிலியோ என்பார், தமது சிறிய தூரதிருஷ்டியைக் கொண்டு கண்டார். 1666-ம் வருஷத்தில், காஸ்ஸினி (Cassini) என்பவர், இக்கிரகம், ஆத்மப்பிரதக்ஷணம்செய்துவருகின்ற வேகத்தை, ஆராய்ந்து கணக்கெடுத்தார். அதன் பயனாக அங்காரக நாள், நமது நாளைக்காட்டிலும், 40 நிமிஷம் நீண்டுளது, எனக் கண்டறிந்தார். இக்காலத்திய ஆராய்ச்சியின்படி, அங்காரக நாள், 24 மணி 37 நிமிஷம் 23 வினாடி நேரமாகும். சில சமயங்களில், செவ்வாய் கிரகத்தில், சிலமங்கலானதோற்றங்கள்எழுகின்றன. இவை மேகமோ, மலையோ, என்று பலர், ஐயப்பட்டிருந்தனர்; இத்தோற்றங்களிற் சிலவற்றின் உயரம், 17 கல் என்று கணக்கெடுத்தார்கள். ஆகையால், அவையனைத்தும் மலையாக இருக்கமுடியாது. அவை, பழுப்பு நிறமாகவும் தோன்றுகின்றனவாம். ஆகையால்,ஒரு சிலர்,இவை நமது ஸஹாராப் பாலைவனத்தினில் மணலில் எழும் சுழல்தூண்கள்போல, அங்

குள்ள பாலைவனத்தே எழுந்து பரந்தடங்கும் தூசுப் படலங்கள், என்ன எண்ணுகின்றனர். தூரதிருஷ்டி வழியே பார்க்கும்பொழுது, சில பகுதிகள் பிரகாசமாகவும், சில பகுதிகள் ஒளி மழுங்கியும், விளங்குகின்றனவாம். பிரகாசமான பகுதிகள், செந்நிறமாகவும், ஒளி மழுங்கிய பகுதிகள் நீலப் பச்சை நிறமாகவும் திகழ்கின்றன. நீலப்பச்சை நிறப்பகுதி, பலவகையான ஒளியோடும் விளங்குவதால், நிலப்பரப்பாய் இருக்கலாமே யன்றிக் கடலாக இருக்கமுடியாது. நாடிமண்டலப் பகுதியோ, பாலைவனம் போலத் தோன்றுகிறது. இதன் துருவமண்டலம், சூரியனுக்குப் பின்புறமாக வரும்போது, வெள்ளைத் தலைமுடி யணிந்து விளங்குகின்றது. வெண்ணுரைபோன்ற இந்தத் தலைக்கோலத்தைக் கண்டதும்,

திங்கள்சூ டியமுடிச் சிகரத் துச்சியில்
பொங்குவெண் தலைநுரை பொருது போதலால்
எங்கள் நாயகன்முடி மிசைநின் றேயிழி
கங்கையாம் தசன்றலைக் கன்னி நீத்தமே

என்னச் சேக்கிழார்பாடலைச் சிறிது திருத்திப் பாடலாம். இந்தத் துருவமண்டலம், சூரியனுக்கு எதிரே திரும்பி வரும்பொழுது, இவ்வெண்முடி அளவிற் குறைந்தே வந்து, சிலபோது மறைந்தும் போய்விடுகின்றது.

கால்வாய்கள்:–மிலான் நக்ஷத்திரசாலையின் (Milan observatory) அதிகாரியான கியோவனி ஷியப்பரெலி (Giaovanni Schiaparelli) என்பவர், 1877-ம் வருஷத்தில், இக்கோளத்தைப் பரிசோதிக்கையில், ஒளியுள்ள பரப்பில், கருமையான கோடுகள் இருப்பதைக் கண்டார். ஒளியுள்ள பரப்பைக் கண்டங்கள் என்றும், கோடுகளைக் கால்வாய்கள் என்னவும் வழங்கினார். பின், லௌவல்(Lowell)என்பவர், இவற்றை, மிகவும் ஊன்றிநோக்கி ஆராய்ந்துள்ளார்; இக்கோடுகள்,இக்கோளம் முழுதும் நிறைந்திருக்கக் கண்டார். இவை, துருவ மண்டலங்களோடு இணைந்திருக்கவும் கண்டார். நீலப்பச்சைப் பரப்புகள், பயிர்களின் நிறம் என்பது இவர் கொள்கை; நம்மூரில், பயிர்கள்முற்றமுற்றப்பச்சைநிறமானதுமங்கிமங்கிப் பின்னர்ப் பழுப்பாய் மாறிவிடுவதுபோல, இந்த நீலப் பச்சைப் பரப்புக்களும் மங்கலாக மாறிப் பின்னர்ப் பழுப்புநிறம்பெறுவதால், இவைகள் விளைநிலங்களே என்றுஅவர்கருதுகின்றார். அதன் துருவமண்டலத்திலே, பனி உறைந்து கிடப்பதால், அது, வெண்முடியோடு தோன்றும். உருகுகின்ற பனிநீர்,கால்வாய்கள் வழியே ஓடிவந்து பாய்வதால், இந்நிலங்கள் விளைகின்றன என்ன எண்ண இடமுண்டாம். ஒரு துருவ மண்டலப் பனிவட்டம் உருகும்போது, ஒருபாதி கோளத்திலும், மற்றொரு துருவமண்டலப் பனிவட்டம்உருகும்போது, மற்றொருபாதிகோளத்திலுமாக கால்வாய்கள் பாயும் பரப்பில் எல்லாம்,பச்சைப்பசும் பயிர்கள், வளர்ந்து முற்றிப் பழுக்கின்றனவாம். அமெரிக்கா முதலிய இடங்களில், பல நூறு காணிகளை ஒரே பொழுதில் வித்தி விளைப்பதுபோல் இச் செவ்வாயிலும்,பல்லாயிரம் காணிகளை,ஒரே பொழுதில், வித்தி விளைக்கின்றார்களாம். இந்தக் கால்வாய்கள், மூவாயிரம், நாலாயிரம் கல் நீளமாய்த் தொடர்ந்து ஓடுகின்றன. இவை, சிறிய கோடுகளாகத் தூரதிருஷ்டியிலே தோன்றினாலும், 12கல் முதல் 20கல் வரை அகலமுள்ளவை என்னக் கணக்கெடுத்திருக்கின்றார்கள். இவ்வளவு ஒழுங்காக இருப்பதால்,இவற்றை, இயற்கை யமைப்பு எனச் சொல்வதிற்கில்லை. அங்கு உள்ளார், துருவமண்டல நீர், தம்முலகிற் பாயுமாறு, வெட்டிய கால்வாய்களே இவை என்பர் லௌவல் என்ற வானசாஸ்திரி.

ஜீவராசிகள்:—இங்கே,ஜீவராசிகள் இருக்கின்றனவோ என்பதேகேள்வி. லௌவல் என்பார், இக் கால்வாய்கள் செயற்கையாக எழுந்தவை எனக் கூறுதலின், இவை, அவரது கொள்கையின்படி, அவ்வுலக மக்கள் வெட்டியனவே ஆதல் வேண்டும். செவ்வாயின் சீதோஷ்ணநிலை, நமது துருவப்பிரதேச நிலையினோடு ஒப்பிடக்கூடியது. பனி உறைந்து கிடக்கின்ற நமது துருவப் பிரதேசங்களில், மனிதர் வசிக்கின்றனராதலின், அத்தகைய அங்காரகப் பிரதேசங்களிலும், ஆறறிவுள்ள ஜீவராசிகள் வசிக்கலாம் என்பது, விபரீத அநுமானமாகாது. அங்கேயுள்ள இயற்கைத் தோற்றங்களைக் காணும்பொழுது, பல வானசாத்திரிகள், நம்மைப்போன்ற ஆறறிவுடையவர்கள் அங்கே இருப்பினும் இருக்கலாம் என்றும், அத்தகையார் நம்மைப்பார்க்கிலும் அறிவு மிகுந்தவராய் இருத்தல் வேண்டும் என்றும், நம்புகின்றனர். ஜீவாதாரமான உஷ்ணத்தைச் செயற்கையில் உண்டாக்கிக் கொள்ளுகின்ற திறமை, இவர்களுக்கு இருக்கலாம். செவ்வாயின்சிவந்த தோற்றமானது, இச் செயற்கை நெருப்பின் தோற்றமே என்னப் புனைந்துரை வகையாகக் கூறலாம். இந்த சிவந்த தோற்றத்தின் காரணம் விளங்காமையால், இப்புனைந்துரையே மெய்யாகலாம். நமது அறிவுக்கும் எட்டக்கூடாத அரிய பல வேலைகளை, அவர்கள் செய்தாலும் செய்யலாம் அன்றோ? இத்தகைய உஷ்ணக் குறைவான பிரதேசத்தில் அறிவுமிக்க ஜீவர்கள்வசிக்குமானால் அவர்கள் ஆற்றல் தெய்வீகமாகும் எனலாம். இவர்களுடைய கால்வாயிலிருந்தும், பயிர்ப்பரப்பிலிருந்தும், இவர்களுடைய நாகரிக நிலையை அனுமானித்து அறியலாம். நம்முடைய நாகரிகநிலை, இன்னும் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர், எவ்வாறு வளர்ந்து முடியுமோ, அதனினும் சிறப்பாய் இக்கோளத்து மக்களின் நாகரிக நிலை விளங்குகின்றது என்னலாம். மனோசக்தியால் தொலைவில் உணர்தலும் தொலைவிற் பேசுதலும் வல்லவர்கள் எனச் சொல்லிக்கொள்வோர், பிறவுலகினரோடு பேசுவதாகக் கூறிக்கொள்ளும்போது, அங்காரக உலகத்தினர் பேரை எடுத்துக் கூறி வருவதாகப் பத்திரிகைகளிலிருந்து அறிகின்றோம். இவை உண்மையா, பொய்யா, என்று ஆராயவேண்டுமானால் செவ்வா யுலகிற்கன்றோ போய்வரவேண்டும்?

உபகிரகங்கள்:—காணுதற்கரிய காட்சியொன்று இக்கோளத்தே நிகழ்கின்றது. இதனைத் தம் மனதிற் கொண்டுதான், ஸ்விப்ட் (Swift) என்னும் ஆங்கிலப் புலவர், ‘கலிவர் பிரயாணம்! என்ற நூலில் லப்பூடா

(Laputa) என்னும் பறக்கிற தீவை வர்ணித்தனரோ என, எண்ணுவாரும் உண்டு. இவ்வங்காரக கோளத்தை, இரண்டு திங்கள்கள் சுற்றிவருகின்றன. இவைகளை, 1877-ம் ஆண்டில், ஹால் (Asaph Hall) என்பவர் கண்டுபிடித்தனர். இவை இரண்டும், இரவிலே தண்ணொளி பரப்பியும், பகலில் சூரியனது புன்சிரிப்போடொத்தாற்போலப் புன்னகை புரிந்தும், திரிந்து வருகின்றன. இந்த இரண்டு உபகிரங்களுக்கும், மார்ஸ் என்ற கடவுளின் குதிரைகளின் பெயர்களையே, பெயர்களாக இட்டு வழங்குகின்றனர். ஒன்று, போபாஸ் (Phobos), என்னப் பெயர் பெறும். ஈது, அங்காரகனுக்கு 3,700 கல் தொலைவிலிருந்து, செவ்வாயை இரண்டு நாளில் ஏழுதரம் வலம் வருகிறது. ஒருதரம் சுற்றிவர, ஏறக்குறைய ஏழுரை மணி நேரமாகின்றது. இது மேற்கே உதித்துக் கிழக்கே அஸ்தமிக்கின்றது; அஸ்தமித்த நாலுமணி நேரத்திற்கெல்லாம், மறுபடியும் மேற்கே உதயமாகின்றது. இத்தகைய காட்சி வேறு எந்தக் கோளத்திலும் நிகழ்வதில்லை. அங்காரகனுக்கு வெகு சமீபத்திலிருந்தும், இதன் ஒளி, குறைவுதான்; நமது சந்திரன் ஒளியில் ஆறில் ஒரு பங்களவேயாகும். இரண்டாவது உபகிரகம் டீமாஸ் (Deimos) என்பதாகும். இது அங்காரகனுக்கு 74,600 கல்தூரத்திலிருந்து, 30மணிக்கு ஒருமுறை, செவ்வாயைச் சுற்றிவருகின்றது. இது கிழக்கில் உதித்து, மேற்கில் அஸ்தமிக்கிறது. இதன் வெளிச்சம், நமது சந்திரன் வெளிச்சத்தில், ஆயிரத்திருநூறில் ஒரு பங்காகும் ($\frac{1}{1200}$). ஆகவே இவ்விரண்டு திங்கள்களும், அங்காரகனை ஒளிபெறச் செய்வதில், பயன்படுவன அல்ல. இவ்விரண்டாலும் செவ்வாய்க் கிரகத்தில், ஒரு வருஷத்தில் 1400 கிரகணங்கள், நிகழ்கின்றனவாம்.

விரிகதிர் மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
[1]எரி[2]சடை எழில்[3]வேழந் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்தமூன் றொன்பதிற் றிருக்கையுள்
உருகெழு வெள்ளிவந் தேற்றியல் சேர
[4]வருடையைப் [5] படிமகன் வாய்ப்பப் பொருள்தெரி
[6] புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடியல்
[7]அங்கி உயர்நிற்ப [8]அந்தணன் [9]பங்குவில்
[10]இல்லத் துணைக்கு[11]உப் பால்எய்த[12]இறையமன்
வில்லிற் கடைமகரம் மேவப் பாம்பு ஒல்லை
மதியம் மறைய தருநாளில் வாய்ந்த
[13]பொதியில் முனிவன் புரைவரைக் கீறி
மிதுனம் அடைய விரிகதிர் வேனில்
எதிர்வரவு மாரி இயைக.

—பரிபாடல்

1. கார்த்திகை - இடப வீதி; 2. ஆதிரை - மிதுன வீதி; 3. பரணி - மேடவீதி; 4. இடப வீதி, 5. செவ்வாய்; 6. புதன்; 7. கார்த்திகை; 8. குரு, 9. சனி; 10, மகர கும்பம்; 11. மீனம்; 12. சனி; 13. அகத்திய நக்ஷத்திரம் (Canopus.)

நரவாகன தத்த சரிதம்

[247-வது பக்கத் தொடர்ச்சி]

iv. வேகவதி லாபம்

கௌசாம்பி நகரடைந்ததும் வழக்கம்போல மதனமஞ்சுகையும் நரவாகனனும் சந்தித்து வந்தனர். ஒரு நாள் திடீரென மதன மஞ்சுகை காணப்படவில்லை. இந்தச் செய்தியைக் கேட்டதும் நரவாகனன் துன்பத்தில் ஆழ்ந்தான். அரசன் கவலையுடையவனானான். உருமண்ணுவாவை யழைத்து நடந்த செய்தியைச் சொன்னபோது அந்த அமைச்சன் இது மடவாரது சாகசச் செயலென்று கூறிப் பிறிதொரு கதையும் சொன்னான். பின்னும் அவன், மதனமஞ்சுகை ஓரிடமும் சென்றிருக்கமாட்டாளென்றும் நன்றாக எல்லாவிடங்களிலும் தேடிப் பார்க்கும்படியும் கூறினான்.

வேவுக்காரர்களும் தோழர்களும் எங்கும் அவளைத் தேடித் திரியும்போது அவள் ஒரு அசோக மரத்தடியின்கீழ் களைத்துக் கிடக்க மாருபூதிகன் கண்டான். அவளைக் களைதெளியச் செய்து நடந்த செய்தியைக் கேட்டபோது அவள் பின்வருமாறு கூறினாள். தான் இளமையாக விருக்கும்பொழுது இயக்கனொருவன் தன்னை விரும்பியதாகவும், அந்த இயக்கன் இவளது எண்ணத்தை நிறைவேற்ற முடியுமானால் தான் அவன் இச்சைப்படி நடப்பதாகவும் அவள் கூறினளாம். அந்த இயக்கன் இப்பொழுது தோன்றித் தான் முன் சொன்ன சொல்லை நிறைவேற்றும்படி கேட்டதாகச்சொன்னான். இவள் மறுதளிக்கவே அவன் அவளைத் தூக்கிச்சென்று குபேரன் முன்னிலையில் விட்டதாகவும், குபேரன் மதனமஞ்சுகை முதலில் நரகவாகன தத்தனை மனஞ்செய்துகொள்ளவேண்டுமென்று கட்டளையிட்டதாகவும் சொன்னாள். ஆதலினாலே தன்னை நரவாகனன் உரிய சடங்குகளோடு வதுவை செய்துகொள்ளவேண்டுமென வேண்டிக்கொண்டாள்.

கணிகையரை அரசர் உரிய சடங்குகளோடு மணப்பது முறையல்லவாகலான் உதையணன் முதலாவதாக மதனமஞ்சுகை குலஸ்திரீ என்று கருதப்படல் வேண்டுமெனக் கட்டளை பிறப்பித்தான். பின்னர் அரசர்க்குரிய மரியாதைகளோடு நரவாகனன் மதனமஞ்சுகையை மணந்தான். மதன மஞ்சுகை கணிகையாக விருந்து குலஸ்திரீயானதோடு அரச குமாரரை மணந்ததற்கு மிக்க மகிழ்ச்சிகொள்ள வேண்டியிருக்க மனக்கலக்கமுடையவளாகவே காணப்பட்டாள்.

இவள் நரவாகனனை மதுவருந்தும்படி செய்தாள். நாளடைவில் அவனைக் குடிமயக்கத்திலாழச்செய்து வந்தாள். இதற்கு வேண்டிய மதுவெல்லாம் கோமுகனால் கொண்டுவரப்பட்டதெனினும் அவன் எதன் பொருட்டு இவ்வாறு செய்கின்றானென்ற செய்தி அறிவது இயலாததாயிற்று.

மதனமஞ்சுகை உறங்குகையில் தன்னைத் தன் கணவனான நரவாகன தத்தன் பார்த்தல் தகுதியன்று என்றும் அதற்கு உடன்படல் வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாள். நரவாகனனும் அதற்கு உடன்பட்டான். நரவாகனனுக்கு இரவில் உண்டாகும் நாவரட்சியைத் தீர்ப்பதற்குத் தண்ணீர் பணியாளனைக்கொண்டு வரும்படி சொல்லுவது வழக்கம். ஒருநாள் அதிக வரட்சையாக இருந்ததால் தனது மனைவியை எழுப்ப நினைந்து அவளைப் பார்த்தான். அவள் மதனமஞ்சுகை யன்று. உடனே அவளை எழுப்பி உண்மையைச் சொல்லும்படி கேட்டபோது அவள் தன் கணவன் தன்னைக் காப்பாற்றுவதாக இருந்தால் உள்ளதைச் சொல்லுவதாகக் கூறினாள். நரவாகனனும் அதற்கு உடன் பட்டான்.

அவள் தன் வரலாற்றைப் பின்வருமாறு கூறினாள்:—

'என் பெயர் வேகவதி. எனது தமயன் பெயர் மானவேகன். நாங்களிருவரும் வேகவதி என்ற விஞ்சையனின் மக்கள். எனது தாயின் பெயர் விருதுவி. வேகவதி கிழத்தன மடைந்தபோது தனது அரசாட்சியைக் குமாரனிடம் ஒப்பித்துவிட்டுக்காட்டுக்குத் தவஞ்செய்யச் சென்றார். காட்டுக்குச் செல்லுகையில் என் தமையனிடம் என்னைப் பாதுகாக்கும்படி அவர் சொல்லிவிட்டுச் சென்றார். என் தமையன் எனக்கு விஞ்சைகளைக் கற்றுக்கொடுக்க மறுதளித்துவிட்டான். என்னால் பறக்கமுடியாமையையும் எனக்கு மந்திரங்கள் தெரியாமையையும் அறிந்த எனது உடன் தோழிகள் பரிகசிக்கலானார்கள். அதனைப் பொறுத நான் என் தகப்பனைத்தேடிச்சென்று தமையனது வஞ்சனையைச் சொன்னேன். அவரும் முதலில் கவனிக்கவில்லை. பிறகு நான் ஒரு மயிலை அவர்முன் சிறை விரித்து ஆடும்படி செய்தேன். அதனால் மகிழ்ச்சியடைந்த அவர் எனக்கு மந்திரவித்தைகளைக் கற்றுக்கொடுத்தார். அதுவன்றி என்னை மணந்துகொள்ளும்கணவனுக்குத்தனது இராச்சியத்தில் பத்திலொருபகுதி தருவதாகவும் வாக்களித்தார். இஃது இவ்வாறாக,

'மானசவேகன் மதனமஞ்சுகையைத் தூக்கிச் சென்றது உண்மை. ஆனால் ஒரு சாபத்தினால் அவன் மதனமஞ்சுகைக்குத் தீங்கு ஒன்றும் செய்ய இயலவில்லை. அவனைச் சிறைவைத்து என்னைப் பாதுகாத்துக் கொள்ளும்படியும் அவளுக்கு நற்புத்தி புகட்டி மானதவேகனை மணந்துகொள்ளும்படியும் சொல்லும்படி நியமித்தான். மதனமஞ்சுகையோ எப்பொழுதும் அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக இருந்தாள். நான் அவள்மேல் பச்சாதாபங்கொண்டு அவளுடைய நிலையை நரவாகனனுக்குச் சொல்லுவதாக ஒப்புக்கொண்டேன். எனினும் எனக்கும் நரவாகனனைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பம் உண்டு. உன்னைக் கண்டபின் உன்னிடம் உண்டான அன்பின் மிகுதியால்தான் மதனமஞ்சுகைக்குச் சொன்ன சொல்லைக் காப்பாற்ற இயலவில்லை. இனி மதனமஞ்சுகை இருக்கும் இடத்துக்கு உன்னை அழைத்துப் போகின்றேன்' என்றாள்.

பொழுது புலர்ந்தது. வேகவதி தனது இயற்கை உருவோடு தோன்றினாள். உதயணன் இவற்றை எல்லாம் அறிந்தபின் வேகவதியை நரவாகனனுக்குமணம்புரிவித்தான். வேகவதியின் தோழிமார்களில் நான்கு விஞ்சைமாதர் நரகவாகனன் தோழர் மனைவியரானார்.

சிறிது நாளில் நரவாகனன் உறங்கிக்கொண்டிருக்கும்போது வேகவதியின் தமையனாகிய மானதவேகன் என்னும் வித்தியாதரன் இவனை ஆகாயமார்க்கமாகத் தூக்கிச்சென்றான். நரவாகனன் வழியில் விழித்துக் கொண்டான். அப்பொழுது மானதவேகன் நரவாகனனை நோக்கி அவன் மதன மஞ்சுகையைப் பார்த்துவிட்டு உயிர்துறக்க விரும்புகிறானா அன்றிக் கடலில்விழ விரும்புகிறானா என்றுகேட்டான். இவர்கள் வாதாடிக்கொண்டு செல்லுகையில் வேகவதி நடந்தவற்றை யறிந்து ஆகாயத்திற் பறந்து சென்று தன் அண்ணனோடு போர் புரிந்தாள். மானதவேகன் நரவாகனனைவிட்டுவிட வேண்டியதாயிற்று. நரவாகனன் பூமியில் விழுந்தான். நல்லவேளையாகஒரு கிணற்றில் விழுந்தான். அரச குமாரனாகையால் தைரியத்தோடு நின்று பழைய நண்பனான அமிர்தகதியை நினைந்தான். அவனும் அங்குத்தோன்றி அவனைக் கிணற்றினின்றும் தூக்கிக் காப்பாற்றிவிட்டு மேலும் தான் யாது உதவிபுரியவேண்டும் என்று கேட்டுநின்றான். நரவாகனன் அவன்செய்த நன்றிக்கு வந்தனை புரிந்து வேகவதியையும் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அமிர்தகதி அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு நரவாகனனிடம் விடை பெற்றுச் சென்றான்.

v. காந்தர்வதத்தை லாபம்

நரவாகனன் இரவெல்லாம் அந்தக் கானகத்தில் சுற்றித்திரிந்து மறுநாட்காலையிற் காட்டைவிட்டுவெளி வந்தான். இவன் அமிர்தகதியைத் தான் இருக்கும் ஊர் எதுவென விசாரிக்க மறந்துவிட்டான். அதனாலே தான் இன்ன இடத்தில் இருக்கிறானென்று அறிந்துகொள்ள இயலவில்லை. சுற்றித் திரிந்தபோது அவன் ஒரு சிங்கார வனத்தைக் கண்டு அதனுள் நுழைந்தான். எதிரில் கண்ட தோட்டக்காரனை அது என்ன ஊர் என்று கேட்டபோது அவன் தன்னை ஏளனஞ் செய்யவேண்டாமென்று சொல்லி அகன்றான். தோட்டத்தினுள்ளே சென்றபோது ஒரு மாளிகை தோன்றிற்று. அதனுள் நுழைந்தான். அங்கே ஒருவன் யாழ் ஒன்றை வைத்துப் பரீட்சை செய்வதைக் கண்டான். அவனையும் இது எந்த ஊர் எனக் கேட்டபோது அவன் தன்னைப் பரிகசிப்பதாக நினைத்தான்.

நரவாகனன் தான் இன்னானென்று வெளியிடுவது பிழையென்றெண்ணி, தான் வத்தவநாட்டைச் சேர்ந்த சிறுவனென்றும், இரவில்துயிலுகையில் ஓர் இயக்கி தன்னைத் தூக்கி வந்து அருகிலுள்ள வனத்தில் எறிந்துவிட்டுச் சென்றதாகவும் கூறினான். இதனைக்

கேட்ட அந்த மாளிகையுடையவன் இரக்கப்பட்டு அந்த ஊரின் பெயர் சம்பாபதி என்றும் தான் ஒரு வணிகன்என்றும் தன்பெயர் தத்தகன்என்றும் கூறினன். தனக்கு இசையில்அதிகவிருப்பம்உண்டென்பதோடு வீணையில் அதிகப் பிரியம் உண்டாகையால் தன்னை வீணாதத்தகன் என்று கூறுவர் என்றனன். அவனைநரவாகனன் அந்த ஊரில் இருக்கும் வரையில் தத்தகன் தன்னுடைய இல்லத்தில் விருந்தினனாக இருத்தல் தகும் என்று உபசாரம் செய்தான். சிறிது நேரங் கழித்து இருவரும் பல்லக்கிலேறித் தத்தகன் மாளிகைக்குச் சென்றனர். தத்தகன் பெரிய தனவானாகையால் எங்கும் செல்வம் நிரம்பி இருந்தது. அதனைக் கண்ட நரவாகனனுக்கு ஏழைப் பார்ப்பனப் பிரமசாரியாகத் தநன் நடிப்பது மிக்க துன்பமாயிருந்தது.

இருவரும் உண்டு களைப்பாறியபின் உரையாடிக் கொண்டிருக்கையில் தத்தகனை நரவாகனன் அந்த சம்பா நகரத்திலுள்ளார் அனைவரும் யாழ் வைத்திருக்கக் காரணமென்னவென்றுகேட்டான். தத்தகன் பின்வருமாறு கூறலானான்:—

'இந்த நகரில் சானுதாசன் எனப் பெயரிய வணிகனொருவன் இருக்கின்றான். அவனுக்குக்காந்தர்வதத்தை எனப் பெயரிய பெண்ணொருத்தி உண்டு. அவள் இசையில் மிக்க வல்லவள். அவளுக்குப் பிறரறியாதது ஒரு பாட்டு பாடத்தெரியும். அந்தப் பாட்டை எவனொருவன் முடிக்கின்றானோ அவனுக்கு அவளை மணந்து கொடுப்பதாகச் சானுதாசன் பறையறைவித்திருக்கின்றான். அதன் பொருட்டு ஆறுமாதங்களுக்கொருமுறை பரீட்சை நடப்பது வழக்கம். அவள் மிகுந்த கட்டழகியாகையால் அவளை யடைய ஒவ்வொருவரும் விரும்பி இசையைக் கற்றுத் திரிகின்றனர். அந்தப் பரீட்சை நாளை வரப்போகின்றது. ஆதலால் பார்ப்பனப் பிரமசாரியும் இசை யறிந்திருந்தால் போட்டி போடலாம், என்றான்.

இதனைக்கேட்ட நரவாகனனானபிரமசாரி தானும் யாழ் வாசிக்கக் கற்றுக்கொள்ள விரும்புவதாகத் தத்தகனிடம்கூறவே, அவனுக்குஒரு உபாத்தியாயரைத் தத்தகன் அழைத்து வந்தான். அவன் மிக்க குரூபியாயும் ஒன்று மறியாதவனாகவு மிருந்ததால் அவனைப் பரிகசித்து உதறிவிட்டு நரவாகனன் யாழில் பயில ஆரம்பித்தான். நகரமாந்தரனைவரும் அதிசயமடைந்தனர்.

பொழுது புலர்ந்தது. எல்லோரும் சானுதாசன் இல்லம் குறுகினர். பார்ப்பனப் பிரமசாரியும் அங்குச் சென்றனன். நகரமாந்தர் நிறைந்திருந்தனர். இவனுடைய வடிவழகைக் கண்ட பலர் இவனைப் புகழ்ந்தனர். சிலர் பொறாமையினால் இகழ்ந்தனர். உலகம் பலவிதம் என்பது அங்கு விளக்கமாயிற்று. சிறிது நேரத்திற் கெல்லாம் காந்தர்வதத்தை யாழோடு தோன்றினாள். பந்தயம் தொடங்கிற்று. காந்தர்வதத்தை பாடத் துவக்கினாள். அந்தப்பாட்டு விசுவாவஸு என்னும் பெயருடைய ஒரு கந்தருவன் பாடிய நாராயணஸ்துதி என்று அறிந்தான். இந்தத் தோத்திரம் இளமையில்உதயணனால்நரவாகனனுக்குக் கற்பிக்கப்பட்டிருந்தது. அப்போதே கந்தர்வதத்தைதன்னுடையவள் என்று அரசிளங்குமரன் கருதினான். யாழொன்று கொண்டு வரும்படி கூறினான். முதலிற்கொடுத்த யாழ்குற்றமுடையது என்று யாழிலக்கணம் பலவற்றைநரவாகனன்பகர்ந்தான், பின்னுமொருயாழ்சானுதாசன் கொண்டுவந்தான். அதனில் சிகையொன்று இருப்பதாக எடுத்துக்காட்டி அதையும் ஒதுக்கினான். மற்றொரு குற்றமற்ற யாழைப்பெற்று அந்த நாராயண ஸ்துதியைப் பாட ஆரம்பித்தான். அவையிலுள்ளோர் அனைவரும் உருகினர். காந்தர்வதத்தையும் தலைகுனிந்தாள். நரவாகனன் போட்டியில் வென்றான் என்று (சானுதாசன்) கூறினான். அவன் கந்தர்வதத்தையை மணந்துகொள்ளும்படி நரவாகனனை வேண்டிக்கொண்டான். அரசிளங்குமரன் தான் பார்ப்பனப் பிரமசாரி யென்றும் வைசியப் பெண்ணை மணப்பது தகாது என்றுங் கூறினான். சானுதாசன் அங்ஙனமாயின் அந்தக் கந்தர்வதத்தையும் பார்ப்பனருக்கும் மேம்பட்டவள், தெய்வப்பிறவியுடையவளென்று கூறி, அவளை நரவாகனனுக்கு மணஞ் செய்து கொடுத்தான்.

காலத்தொனி

[47-வது பக்கத் தொடர்ச்சி]

பல கோடி வருடங்கள்முன், உட்சக்திக் கதியினால் சில நுண்ணிய கிருமிகள் உந்தப்பட்டுப் படிப்படியாய் ஊர்ந்து பறந்து நடந்து நிமிர்ந்து செல்லும் நானாவித ஜீவ வர்க்கங்களாக மாறி வளர்ந்து பரவி இறுதியில் மானுடனாக உயர்ந்தனவோ, அல்லது, விவிலிய நூற்களில் விஸ்தரிக்கப்பட்டிருப்பது போல், பற்பல வாயிர ஆண்டுகளுக்கு முன் ஸ்தாவர ஜங்கமங்களெல்லாம் பிரபஞ்ச கர்த்தாவினால் ஒரு வாரத்திற்குள் சிருஷ்டிக்கப்பட்டனவோ என்ற பிரச்னையைத் தெளிவிப்பதெம்முடைய நோக்கமின்றாதலின் விடுத்து, "உலகமும் உலகாதிகளும் நம்மைச் சுற்றிலும் விரிந்து கிடக்கின்றன: மானுடன் அவைகளுள் தலைமை பூண்டு விளங்குகிறான்" என்ற விஷயத்தைக் குறிப்பிட்டு மேல் தொடர்வோம்.

அந் நாள்தொட்டு இந்நாள் வரையிலும் பறவைகள் ஒரே மாதிரியாகவே கூடுகள் கட்டிவருகின்றன; தேனீக்கள் ஒரேவழியில் தான் வளைகள் நிருமித்து வருகின்றன. சிலந்திகள் ஒரேவிதமாகவலைகள்பின்னி வருகின்றன; இப்படியே, பறவைகளும் விலங்குகளும் மெத்தகைய மாற்றமும் திருத்தமுமின்றி ஆரம்பத்தில் பற்றிய முறைகளையே இவ் விநாடி வரையிலும் அணுவளவேனும் பிறழாதுபற்றித்தொடர்ந்துதமது ஜீவகாலத்தைச் செலுத்தி வருகின்றன. ஆனால், முதலில், பகல் முழுதும் திரிந்து சுலபமாய்க் கிடைத்த காய் கனி கிழங்கு வேர்களைத் தின்று, ஆறுகளிலும் ஏரிகளிலுமுள்ள நீரைப்பருகி, இரவில் மரத்தினடியிலோ, குகைகளிலோ, பள்ளத்தாக்குகளிலோ ஏனைய மிருகங்களைப்போலவே உறங்கி, நிர்மாணமாகவோ, அல்லது இலைகளிலும் பட்டைகளாலும் ஆக்கப்பட்ட உடைகளைப் போர்த்தோ தன் ஜீவிய காலத்தைப் போக்கிவந்த "அநாகரிக" "மூர்க்க" மனிதன் மாத்திரம், நாள் செல்லச்செல்ல, அவ் வநாகரீகத்வமும் மூர்க்கத்வமும் குறைந்து திருந்தப்பெற்று, ஓடியலையும் சுவபாவம் சிறிது அடங்கிக் கிருஷிகனாக மாறி, மிருகங்களிற் சிலவற்றைத் தன் ஊழியக்காரராகப் பழக்கிக் குடும்பங்கள் வளர்த்து, நீர் நெருப்புக் காற்றுக்களைத் தன் தோழர்களாக உபயோகித்து, வீடுகளையும் மாளிகைகளையும் அரண்மனைகளையும் எழுப்பி, சமூகங்களையும் பள்ளிக்கூடங்களையும், இராஜாங்கங்களையும் ஸ்தாபித்து, கலைகளையும் தொழில்களையும் அபிவிர்த்திசெய்து உயர்ந்து பரவினன். இதரப் பிராணிகளிடமில்லாமல் மனிதனுள் மாத்திரம் பிரசன்னமாகி, அந்த நூதனங்களுக்குக் காரணமாகி நின்று, இந்தப் பிரகிருதி அல்லது இயற்கை உலகைத் தன்னுடைய துணைவனாகச் செம்மைப்படுத்தி மாற்றுவிக்கும் பிரத்தியேகச் சக்தி, அல்லது கருவி, யாதோ? உடையணிந்து, காய்களைப் பக்குவப்படுத்தி வாழும் விலங்குகளையும் பக்ஷிகளையும் கட்டுக் கதைகளில் காண்பது தவிரப் பிரகிருதியில் அவை உண்மையாக இருந்தனவுமல்ல, இருப்பனவுமல்ல. மானுடராசியின் மேலேற்றத்திற்குப் பிரதானமாக இருப்பது ஒருவரதை ஒருவருக்குத் தெரிவிக்கக் கூடியதாகிய 'பேச்சு'; இது கீழ் ஜீவராசிகளிடம் காணப்படவில்லை.

"அற்றன்று; மாந்தருலகில் தோன்றும் விநோதங்களும் உன்னதங்களும் சிற்சில புட்களிடமும் விலங்குகளிடமும் காணப்படுகின்றன. ஒவ்வோர் அளவிலும் ஒவ்வோர் விதத்திலும் பேசியும் பாடியும் எழிலறிவுபெற்று இனித்திருக்கும் பக்ஷிகளும் மிருகங்களுமுள்ளன. மாந்தரும் மற்றைய ஜீவராசிகளும் ஒரே சக்தியினின்று பரிணமித்துப் பற்பல திறங்களுடன் தோன்றுவன. ஜீவவுலகில் காணப்படும் வேற்றுமைகளெல்லாம் அளவிற்றானேயல்லாது தன்மையினால் அல்ல. இவைகளுக்குக் காரணம், பற்பல வுறுப்புக்களாலாக்கப்பட்ட உடல் அல்லது உருவமேபோலும். உணர்வும் கற்பனா சக்தியும் விவேகமும் மானுடராசியில் மாத்திரம் தோன்றிப் பெருகுவன எனச் சாதித்தற்குச் சான்று சிறிதுமில்லை. காலச் சுழற்சியில், உள்ளொடுங்கிக் கிடந்த சக்தியே தான் புதுப்புது விருக்ஷ ஜாதிகளையும் விலங்கினங்களையும் வெளிக்கொணர்ந்து, பசி தாகம் வெறுப்பு உவப்பு வலி வருத்தம் விருப்பம் பற்று முதலானவைகளால் அனைத்தையும் தாக்கிவருத்தி, அவ்வேட்கைகளைப் பூர்த்திசெய்வதற்காக உழைக்கச்செய்து, அழ்வுழைப்பின் மூலமாக தேக அவயவங்களையும் வண்ணத்தையும் வளர்த்திப் பலப்படுத்தி வருகின்றதுபோலும். மிக்கதாழ்வான புழுக்களிடமுமுள்ள சுயஞானம் அல்லது இயற்கையறிவேதான் (Instinct) நாளுக்குநாள் பலவித அநுபவங்கள் மூலமாகத்தெளிந்து விரிந்து ஆழ்ந்து திட்பமுற்று ஞானமாகப் பிரகாசிக்கின்றனபோலும். ஜீவராசிகளின் வித்தியாசங்களெல்லாம் தோற்றத்திலேதானுள; குணாதிசயங்களின் வேற்றுமைகள் அளவிலேதானுள; தொழிற் பேதங்கள் சீர அமைப்பிலேதானுள," எனச் சிலர் வாதிக்கின்றனர். இவ்வழக்குக்களில் தலையிட்டு உழலுதல் எம்நோக்கத்திற்கு அயலானது.

அகப்புறவாராய்ச்சிகளினாலும், ஞாபக சக்தியினாலும், சமூகக் கூட்டுறவுகளினாலும், தொழில்களின் வளப்பத்தினாலும், பாஷாபிவிர்த்தியினாலுமேதான் பொருளும் பொருத்தமு மற்றனவாகக் காணப்படும் பிரபஞ்சாதிகளுள் "நன்மை தீமை, அழகு விகாரம், சுகம் துக்கம், ஏற்றம் தாழ்வு"கள் என்ற வரம்புகளேற்படுத்தி, சித்தசக்தியினாலும் பலதிறமுயற்சிகளாலும் பின்னவைகளைச் சீர்ப்படுத்தி யாவற்றையும் இயைத்து மாற்றுந்தாயாக விளங்குகிற பிரகிருதியின் கட்டுப்பாடுகளினின்று தம்மை விடுவித்து மேலெழுதற்கான திறனுடையது மானுடராசிதான் என்பது வாதித்தற்கியலாத விஷயமாகும். காணவுங் கருதவுங் கூடாத சிறு விஷஜந்துக்களால் மானுடன் மாய்க்கப் படினும், தேகபலத்திலும் நெடும் பார்வையிலும் அதிவேக ஓட்டத்திலும் சிரவணேந்திரியக் கூர்மையிலும் மற்ற ஜீவன்களுடன் ஒத்திட்டுப் பார்க்கையில், மானுடன் ஓர் அற்பஜீவனாகவே தோன்றினும், புய லிடி வெள்ளம் பூகம்பம் முதலாகியவைகளால் தாக்கிச் சிதைக்கப்படினும், அவ்விபத்துக்களை முற்றிலும் அழித்தற்கு ஆகாவிடினும், அவைகளின் உக்கிரத்தை அடக்கித் தன் வாணாளை இனிமையுறச் செலுத்தற்கான அபூர்வசக்தி பொருந்தியவன் மானுடனே யாவன். இச் சக்தியியக்கத்தினால் இலக்ஷக்கணக்கான ஜீவராசிகளுக்கு மேலாக மானுடன் விளங்குதல்போல், மாந்தருலகில், அச்சக்தியின் இயக்கத்தினாலும் பெருக்கத்தினாலுமேதான் அநாகரீகன் நாகரீகனாகவும், மூர்க்கன் அறவோனாகவும், மௌட்டியன் ஞானியாகவும், மற்று, அடிமை சுதந்தரியாகவும் உயராகின்றான். கட்டுமரங்களும் படகுகளும் மாட்டுவண்டிகளும் "மிதந்தோடும் மாளிகை"களாகிய நீராவிக்கப்பல்களாகவும், பறக்கும் ஆகாயவிமானங்களாகவும் மாறுகின்றன; பாறை நிலங்களும், சேற்றுப் பூமிகளும், பாலைவனங்களும், துஷ்ட மிருகங்கள் செறிந்த அடவிகளும் கிராமங்களாகவும் பட்டணங்களாகவும் உயர்கின்றன; குடிசைகள் நாளாவர்த்தியில் மாடமாளிகை கூடகோபுரங்களாகப் பரிணமிக்கின்றன; முட்களும் கற்களும் புதர்களும் நிரம்பிய பாழ்நிலங்கள் திவ்வியப் பூங்காவனங்களாகத் திகழ்கின்றன. இவைகளுக்கெல்லாம் காரணம் மேற்சொல்லிய "தெய்விகச் சக்தி" என்பதானாலும் அச்சக்தியானது சமூகவாழ்க்கை மூலமாகத்தான் தன்னுடைய அரும்பெருங் குணாதிசயத்தைத் தோற்றுவித்துத் தன்னுடைய உள்ளக்கருத்தை நிறைவேற்றுதற்கு இயலும். இச் சங்கவாழ்க்கையைப் பிணைத்துப் பலப்படுத்திச் சிறப்பிப்பது பாஷையாகும். பாஷை வளர்ச்சியும், கனப்போக்கும் தேர்ச்சியும், வாழ்க்கை ஆதர்சங்களும், இவைகள் நிறைபெறுதற்கான முறைகளும், ஒற்றுமை வளர்ச்சியும் வியாபகமும் ஒன்றற்கொன்று ஆதாரமாகவும் தூண்டுகோலாகவும் பக்கபலமாகவும் விளங்குகின்றன. பசிதாகம் அவா பற்றுக்களால் பீடிக்கப்பட்டு வருந்துகையில், பிரகிருதியின் அமைப்பையும் போக்கையும், பிரபஞ்சாதிகளின் தாரதம்மியங்களையும் ஊன்றிப் பார்த்து அறிவதினின்றுதான் மேற்காட்டிய பெரும் மாறுதல்கள்நிகழ்கின்றன வென்பதைச் சிறிது விளக்குவாம்.

பல போலிகள் இருப்பதால் நம்பிக்கையடைய நேரில் எழுதுக.

அஜீர்ண பித்த சமனம்

ரூ. ஒன்று அனுப்பி 12 பாக்கெட்கள் நஞ்சன்கூடு பல்பொடி வீட்டில் பெறுக.

நஞ்சன்கூடு பல்பொடி

சோல் ஏஜண்ட்: யுனைடட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

சர்வதிகாரிகள் சம்பளம்:—இத்தாலி நாட்டுச் சர்வாதிகாரி சிஞ்ஞோர் முஸோலினி தனக்கு வாரம் ஒன்றிற்கு 6 பவுன் வீதம் சம்பளம்விதித்துக்கொண்டிருக்கின்ருர். இந்தச் சிறு தொகையும் செலவழிக்க அவரால் முடியவில்லை. தனக்குத் தேவையான அனைத்தும் வியாபாரிகள் இனமாகவே அனுப்பிவிடுகின்றனர். எனவே, தனக்கு அதிகத்தொகை தேவையில்லையென்று அவர் கூறுகின்ருராம். சோவியத் ருஷ்ய சர்வாதிகாரியான தோழர் ஸ்டேலின் வருடம் 20·0 பவுன் தனக்குச் சம்பளம் விதித்துக்கொண்டிருக்கின்ருர்.

இரட்டையர் ஒற்றுமை:—இங்கிலாந்தில் தேவன்ஷையர் என்னுமிடத்தில் இரட்டைப்பிள்ளைகளாகப் பிறந்த இருவர் இருக்கின்றனராம். அவர்கள் தாங்கள் ஓரேநாளில் ஓரே இடத்தில் ஓரே வயிற்றில் பிறந்ததுபோலவே தங்கள் பன்னிரண்டாம் பிராயத்தில் இருவரும் ஒன்ருக வேல்ஸ் நாட்டிற்குக் குடியிருப்பதற்குச் சென்றனராம். அதுபோலவே வர்த்தகக் கூட்டத்தில் இருவரும் ஓரே நாளில் சேர்ந்தனராம். அவர்கள் இருவரும் கல்யாணமும் ஓரே நாளில் செய்துகொண்டார்களாம். ஒவ்வொருவருக்கும் பத்துப் பிள்ளைகள் இருக்கின்றனவாம். இருவரும் கோயிலில் பாட்டுப் பாடுவார்களாம். அடுத்தடுத்த வீட்டிலேயே அவர்கள் பல ஆண்டுகள் வாழ்ந்து வந்தவர்களாம்.

வைதீகக் கப்பல்:—வைதீக ஹிந்துக்கள் ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா முதலிய தேசங்களில் முக்கிய நகரங்களைப் பார்வையிடுவதற் கனுகுணமாக ஒரு கப்பல் பிரயாணத்திற்குக் கல்கத்தா மார்வாரி மண்டலத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றனர். 250 பேர் இக்கப்பலில் பிரயாணம் செய்யலாம். கப்பலில் ஒரு அறையில் மகாவிஷ்ணுவின் விக்கிரகம் வைத்துப் பிரதிதினமும் பூஜைக்கு ஏற்பாடு செய்யப்படும். பூரண ஆசாரத்துடன் பிரயாணிகள் போய்வரலாம். ஐந்துமாதத்தில் பிரயாணம் முடிவடையும். ஆகாராதிகளில் வைதீக ஹிந்துக்களுக்கு யாதொரு குறையும் இராது.

* * *

"Behind the Brass Plates" என்ற புத்தகத்தில் டாக்டர் ஏ. டி. ஷோபீல்டு என்பவர் ஒவ்வொரு மனிதர் உடம்பையும் சுற்றி ஒருவித ஜோதி யிருக்கிறதென்று கூறுகிருர். அது உடம்பிலிருந்து சுமார் ஐந்தங்குலம்வரை சுற்றி யிருக்கிறதாம். ஒவ்வொருவருக்கும் அவரவர் குணத்திற்கேற்ப மேற்படி ஜோதியின் நிரம் மாறுபட்டிருக்குமாம். இந்த விஷயம் நமது முன்னேர்கள் கூறியதேயாகும்.

உடம்பை மூடுவது எதுவானுலும் அதுவே உடை என்று அநேகர் எண்ணிவிடுவது போல, மனிதர் கண்களுக்குப் பொதுவாக எல்லா இன்ஷூயரன்ஸ் பாலிஸிகளும் ஓரே மாதிரியாகத் தோன்றலாம். ஆனுல், பகுத்தறிவும் அழகின் தரமும் தெரிந்தவர், உடை யெவ்வாறு தைக்கப்பட்டிருக்கின்ற தென்பதையும், அது நெடுங்காலமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தையற்காரர் இடத்திலிருந்து வருகிறதா வென்பதையுங் கவனிப்பார்கள். 'நாஷனல்' பாலிஸிக்கு இந்தச் சிறப்பு முத்திரை யிருக்கிறது. கல்கத்தாவில் ஹெட் ஆபீஸ் உடைய

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பெனி லிமிடட்

கொடுக்கின்ற ஒவ்வொரு பாலிஸிக்கும் முப்பது வருடத்திய திறமை வாய்ந்த இன்ஷூயரன்ஸ் காரியானுபவம் ஆதாரமா யிருக்கிறது.

அஸ்ஸெட்ஸ் 2½ கோடிக்கு மேல்
நடைமுதல் பிஸினஸ் 10 கோடிக்கு மேல்

ஏஜென்ஸி எடுத்துக்கொள்ள விரும்புகின்றவர் கீழ்க்காணும் விலாஸங்களுக்கு எழுதவும்.

ப்ரான்ச் ஸெக்ரடரி, நாஷனல் இன்ஷூயரன்ஸ் பில்டிங், 362. சைனுபஜார் தெரு, சென்னை.

ஆர்கனைஸிங் ஸெக்ரடரி, ஸப் ஆபீஸ், 171. ந்யூ ஸ்ட்ரீட், மதுரை.

சீப் ஏஜன்ஸி, ஆர்காட் ஸ்ரீனிவாசார் தெரு, பெங்களூர் ஸிடி.

நெருப்பு மோட்டார் விபத்துக்கள்,

அஸ்ஸொஸ்ஸியேடெட் நாஷனல் பையர் அண்ட் ஜனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பனியால் (லிமிடெட்) இன்ஷ்யூர் செய்யப்படும்.

இண்டோ-கம்மர்ஷியல்

பாங்க், லிமிடெட்.

மாயவரம்

சென்னை ஆபீஸ், 107. அரண்மனைக்காரத் தெரு,
பஜார் பிராஞ்சு, 260. சைனுபஜார் ரோட்,
மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.
சப்-ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்

எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி. மதருஸ்.

சிறந்த பலவிருத்தி ஒளஷதம்

சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)